# ஆலயமணி

ஆசிரியர் : புலவர் ஈழத்துச்சிவானந்தன்

428



2

போதொடு நீர் சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்.

விலை ரூபா 7-00

யாழ்ப்பாணத்தில் ஒரு மகாராணி

மங்கையரை மகாராணியாக்கிடும்

சுபமுகூர்த்தப்

பட்டுப் பிடவைகளுக்கும்

சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற

றெடிமேட்

ஆடை வகைகள் அனைத்திற்கும்

கைராசியான ஸ்தாபனம்

# மகாராணி ரெக்ஸ்ரைல்

50, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

MAGARANI TEXTILE

**50, GRAND BAZAAR,**

**JAFFNA.**

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடந்த ஆலய மணி வெளியீட்டு விழாவிற்கு யாழ் - பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர்

## பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

# வழங்கிய வாழ்த்துரை

ஈழத்துச் சிவானந்தன் அவர்களுக்கு அறிமுகமே தேவை இல்லை. இவர்கள் பெரும் சைவப்பரம்பரையில் வந்தவர்கள்; ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் உடன் பிறந்தோன்; ஆனால் அவர் எனக்கு அறிமுகமானது ஆயுள்வேத வைத்ய கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களின் மைந்தன் என்றே. வைத்திய கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களை நான் முதலில் அளவளாவிச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது; இதுவரை எங்கும் விஞ்சாத வகைச் சிறப்புறப் பெரும் யாகசாலைகள் அமைக்கப் பெற்று வெகு விமரிசையாக நடந்த முன்னேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பொழுதேயாம். இது நடந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. சைவப்பற்றையும், சைவசித்தாந்தப்பற்றையும் அவரிடத்தில் கண்ட யான் இன்னும் அதை நினைந்து பெருவியப் படைகிறேன்; பெருமிதம் கொள்ளுகிறேன். அவரது மூத்த மைந்தன் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் பேச்சு வன்மையைப் பலமுறை நேரில் கேட்டுப் பெருங் களிப்பெய்திய சந்தர்ப்பங்கள் பலப்பல.

புலவர் சிவானந்தன் அவர்கள் சிறந்த பேச்சாளர். இதை மூலதனமாகக் கொண்டு சமயசேவை செய்து வருபவர். இத்துடன் இவர் திருப்தி அடைவதாக இல்லை. நா வன்மையைக் காட்டிலும் எழுத்து வன்மை வலிது என்பதை உய்த்து உணர்ந்தார். வெறும் பேச்சுக்களாலமையும் நாவன்மை, எவ்வளவு வலிமை படைத்ததாயினும், நாவிலெழுந்த மாத்திரத்தே நிலவி, ஒரு காதின் ஊடாக உட்பாய்ந்து மறுசெவி வழியே வெளியேறும் இயல்பினது. தொடர்ந்து பலகாலம் தரித்து நிற்கும் இயல்பற்றது. அதன் வலிமை நாள

டையில் நலிந்து தேய்ந்துவிடும். எழுத்து வன்மையோ வெனின் வரி வடிவில் பொறிக்கப்படும் பொழுது, தொடர்ந்து நிலவுவதாய், ஒலி போன்று உடனே உருக் கரந்து மறைந்து விடாது, வாசிக்குந் தோறும் தொடர்ந்து அழியாது விளங்குவதாய், அதேவடிவில் நின்று பயன்தருவது. சுருங்கக் கூறின் பேச்சாளர் புலவர் அவர்கள். எழுத்தாளனுக மாறத் தீர்மானித்தார். அதன் விளேவே ஆலய மணி. தான்மட்டும் அன்றித் தரம் வாய்ந்த பல சிந்தனே யாளர்களும் தம் கருத்துக்களேப் பரப்ப வைக்கும் களஞ்சியமாக ஆலய மணியைத் திகழச் செய்ய முன் வந்துள்ளார்.

உயர் பெரும் பரம் பரையில் வந்த இப்புலவரை விடப் பயனுள்ள சமய சேவை செய்வதற்கு வேறுயார் தகுதியாளர்? இவர் சமய சேவை, சமயப் பிரசாரத்தையே லக்ஷ்ய மாகக் கொண்டது. பிரசாரம் என்ருல் '' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்றவாறு பரப்புதல் என்று பொருள். இவர் செய்ய இருக்கும் பிரசாரம் விபரீதமான அர்த்தங் கொண்டதாய், மற்றைய சமயத்தவர்களே, பரசமய தூஷணம் மூலம் எங்கள் மதத்திற்கு ஈர்த்து இழுக்கும் பிரசாரமன்று. இவர் செய்ய விழைவது சமயக் கருத்துக்களே – உயர் கருத்துக்களே – சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுத்து மூலம் பரப்புவதே. தெரியாதவற்றை எல்லாம் தெரிய வைப்பதும், எங்கள் சமயத்தின் நுண்ணிய அம்சங்களே எல்லாரும் உணரவைப்பதுமே, இச்சஞ்சிகையின் நோக்கம். ஆலயமணி, எழுத்துவடிவில், சஞ்சிகைகளாக வெளிவரும். எழுத்து வடிவில் அமைந்தாலும், மணி, ஓசையாகி, உயர் கருத்துக்களே உள்ளடக்கி, ''டாண் டாண்'' என்று கேட்ட மாத்திரத்தே மட்டுமன்றி, சிந்திக்கும் தோறும் நுண்ணிய வகையில் ஒலி எழுப்பி நாதர் பரப்பி நிற்கும்.

சாதாரண அறிவு உடையவரும் சமயம் பற்றி விரிவாக அறிந்து கொள்ளும் வகையில் பலவகைப்பட்ட கட்டுரைகளே உள்ளமைப்பாகக் கொண்டு, எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் எளிய நடையிலமைந்து, ஆலய மணி உருவாகும் என்பதை நினேக்கும் பொழுது மிகவும் சந்தோஷம் பெருகுகிறது.

சமயம் நம்பிக்கையை அடித்தளத்திற் கொண்டமைவது. எங்கள் சமயம் தொன்மை மிக்கது. எம்மிறைவனும் முன்னேப்பழம் பொருட்கு முன்னேப் பழம் பொருள். பின்னேப் புதுமைக்குப் பேற்றுமப் பெற்றியன். இவ்வாறு அமையவே, அவனேப் பற்றிய சமயமும் அவ்வாறே அமைந்து பழமையும் புதுமையும் ஒருங்கு விரவியது. மிகப்பழைய சம்பவங்களே மட்டுமன்றி இன்று வரை நிகழ்ந்த புதுமையான சமய நிகழ்ச்சிகளேயும் விவரிக்க விழையும் ஆலய மணிக்கு

**விஷயப் பஞ்சம்** ஒருகாலும் வராது. நிரம்ப விஷயங்கள் இருந்து கொண்டேயிருக்கும். இலக்கிய வளம் பெருகியது எங்கள் சமயம். விரி கடல் போல் விரிந்து இருப்பது சமஸ்கிருத மொழியில் உள்ள சமய இலக்கியம். அவ்வாறே பல்கிப் பெருகி, அலைவரிசைகள் தோன்றும் பெரும் நீர்த்தேக்கமான கடல் போன்று விரிந்து, இருப்பது **தமிழ் சமய இலக்கிய சமுத்திரம்**. சற்று அகலக் கண்களை விரித்து இந்து சமயம் என்ற நோக்குடன் பார்க்கும் பொழுது, பாரத நாட்டில் வழங்கும் மொழி கள் பலவற்றிலும் சமய இலக்கியங்கள் கடலாக இருக்கின்றன. இக் கடல்களில் மூழ்கும் எழுத்தாளர்கள் ஒவ்வொரு முத்தாகப் பலமுத் துக்களை வெளிக்கொணரும் பொழுது, இச் சஞ்சிகை நாளடைவில் முத்தாரங்களாலேயே அணி செய்யப்படும் சந்தர்ப்பம் வரும் என் பது என் கருத்து.

மணி இல்லாத ஆலயங்களே கிடையா. அம்மணிகளோ கண் டாமணி என்றும், கைமணி என்றும், கொத்து மணிகள் என்றும் இறைவன் முன்னிலையில் அவ்வப்போது ஒலித்து வருகின்றன. சந்நி தானத்தை உரியவேளைகளில் மூடி மறைக்கும் வாயிற் கதவுகளிலும் பொருத்திய மணிகள், அவை திறக்கும் பொழுது கணீரென ஒலிக் கும். தேர்கள் அசையும் பொழுதும் மணிகள் அசைந்து ஒலிப்பன. வெகு தொலைவில் கேட்கும் ஆலயமணி ஓசை, இறை சிந்தனையை வருவித்து, அப்பா, முருகா, ஷண்முகா, கணேசா, அம்பிகே, நாரா யணு, என உரியவாறு தெய்வங்களின் நாமங்களைச் சொல்ல வைத்து நம்மைப் புனிதமாக்கி விடுகின்றன. புலவர் ஈழத்துச் சிவானந்தன் வெளியிடும் ஆலயமணி இவ்வாறு அவ்வப்போது ஓசைகளை வருவித்து இறைவன் சிந்தனையைப் பரப்பி நம் உள்ளத்தை, - நம் சரீரமுழுவ தையுமே தூய்மைப் படுத்துவதாக.

இலௌகிக நிலையில் ஒலிக்கப்படும் மணிஓசைகளும் - அதாவது, இரயில் நிலையம், பள்ளிக்கூடம், பெரும் தொழில் நிறுவனம் ஆகிய வற்றில் எழும் மணிஓசை, மக்களைச் சுறுசுறுப்படையச் செய்து, தத்தம் கடமைகளில் ஊக்கத்துடன் ஈடுபடுத்துவன.

தேவாலய மணி ஓசைக்கு, விசேட சக்தி உண்டு. இம்மணி ஓசை எழும்பியதும், தேவர்கள் பெருந்தொகையினராக அங்கு சமுகமளிப் பர். தீய சக்திகள் அங்கிருந்து அகன்று மறைந்தொழிகின்றன. மணி ஓசை தேவர்களைக் கூவி யழைக்கும் சின்னம்.

இனி வெளிவர இருக்கும் ஆலய மணி இவ்வாறு நல்லெண்ணங் களையும் நற் சிந்தனைகளையும் பெருக்குவதாயும், தீய எண்ணங்களையும் நாஸ்திகக் கோட்பாடுகளையும் விரட்டி ஓட்டுவதாயும் திகழ்ந்து பெரும்

சமய சேவை செய்து வரவும், ஆலயமணி தொடர்ந்து அவ்வக்காலங்களில் ஒலித்துக் கொண்டே இருக்கவும், எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகத்தை முன்னிட்டு ஆசி கூறுகிறேன்.

ஆகமார்த்தம்து தேவானும் - தேவர்களின் வருகைக்காவும்,
கமனுர்த்தம் சரக்ஷசாம் – அரக்கர்கள் அகன்று விலகவும்,
குர்வே கண்டாரவம் - மணி ஓசையை எழுப்புகிறேன்,
தேவதாஹ்வான லாஞ்சனம் – இது தெய்வ சாந்நித்தியத்தின்,
அடையாளம்

என்று சொல்லியே ஆலய கைமணி ஓசையை சிவாச்சாரியர்கள் இன்றும் கோவிலில் எழுப்புவர் - ஆலய மணியின் நோக்கம் இனிது நிறைவேறுவதாக.

– கா. கைலாசநாத குருக்கள் –

# ஆலயங்கள் சமுதாய மையங்கள்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழ்நாடு, ஆலயங்கள் நிறைந்தநாடு. விண்ணளந்து காட்டி விண்மறைக்கும் திருக்கோயில்கள் தமிழ் நாட்டுக்கு அழகும் பொலிவும் ஊட்டுவன. கல்லெல்லாம் கலையாக்கி, பேசும் பொற் சித்திரமாக்கி, வழிபடும் தெய்வமாகவும் படைத்துக் காட்டிய திறம் தமிழர்க்கேயுரியது. சென்ற காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி, தமிழ்நாட்டின் வரலாற்றை இயக்குவதில் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் முக்கியமான பாததிரத்தை வகித்து வந்துள்ளன. ஏற்றுக்கொண்டுள்ளன! தமிழ்நாட்டுமக்கள் வாழ்க்கையில் வளர்ச்சியில், மாற்றங்களில் மிகுதியும் பங்கு பெற்றிருந்தவை திருக்கோயில்களே! என்பது வரலாறு கூறும் உண்மை. அன்றாட வாழ்க்கை முதல் மொழி, கலை, இலக்கியம், சமயம் ஈறான அனைத்துத் துறைகளிலும் திருக்கோயில்களுக்குப் பங்குண்டு. தமிழ்நாட்டின் அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய அனைத்துமே திருக்கோயில்களின் வட்டத்தைச் சார்ந்தே இயங்கியுள்ளன; வளர்ந்துவந்துள்ளன. தமிழ்நாட்டு வரலாறு திருக்கோயில்களின் வரலாறு; திருக்கோயில்களின் வரலாறு தமிழ்நாட்டின் வரலாறு.

**வாழ்வியலும் சமயமும்:**

வாழ்க்கை அருமையானது. அருமையிலும் அருமையானது. ''வாழ்க்கை பொய்ம்மையானது துன்பமானது'' என்ற கருத்து தமிழியலுக்கு மாறானது. ''வாழ்க்கை வாழ்வதற்கே!'' வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்பன தமிழ்நெறி; தமிழர் கோட்பாடு! வாழ்வாங்கு வாழ்வதற்குச் சிந்தனை தேவை; தெளிவு தேவை; அறிவு தேவை; ''சிந்தையுள் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி'' என்பது திருமுறை. மானிடத்தை மற்றஉயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டுவது சிந்திக்கும் திறனேயாம். ''நான் ஆர்? என் உள்ளம் ஆர்? என்று சிந்திக்கின்ற பொழுது உயிர் தன் மதிப்பீடு செய்து கொள்கிறது; தன்னை அறிந்து கொள்கிறது. தன்னுடைய குற்றங்குறைகளைத் தெரிந்து உணரும் உயிர், மேம்பாட்டை நோக்கி அவாவுவது இயற்கையின் நிகழ்வு. இது அறிவியல் சார்ந்த உண்மை. குறைகளை உணர்தலே நிறைகளைப் பெறுவதற்குரிய வாயில்; தன் அறியாமையை உணர்தலே அறிவைப் பெறுவதற்குரிய வாயில்! மனிதன் விலங்கல்ல; மனிதனுமல்ல! மனிதன் விலங்குத்தன்மை

யிலிருந்து விலகி, மனிதத்தன்மையை முயன்று பெற்று, அதனினும் உயர்ந்த இறை நலம் அல்லது கடவுள் மங்கலம் அடைதலே வாழ்க்கையின் பரிணும வளர்ச்சி. இந்த முயற்சி எளிதில் கைகூடுவதே! ஆயினும் அருமைப்பாடுடையது என்பதையும் மறந்து விடுதற்கில்லை!

மானிடன் தன் புலன்களின் அழுக்கை அகற்றி, பொறிகளில் தூய்மை காத்து, தன்னைப்பக்குவப்படுத்திக் கொள்வதற்கு உதவுவது சமயநெறி, ஒன்றுக்கொன்று சுவை ஒவ்வாதனவாக உள்ள உணவுப் பொருள்கள் தனித் தனியே இருக்கும்வரை சுவைக்கத் தக்க சுவையும் பெறுவதில்லை; உண்ணவும் நுகரவும் இயல்வதில்லை; உடலுக்கு நலமும் தருவதில்லை. இங்ஙனம் சுவைவேறுபாடுள்ள பல்வேறு பொருள்களை ஒத்திசைந்த நிலையில் கூட்டிப் பக்குவப்படுத்தும் தொழிலுக்குச் ''சமையல்'' என்று பெயர். சமைத்தல் – உணவைப்பக்குவப் படுத்தல். சமைதல் – மகளிர் பருவநிலைஎய்துதல், இந்தச்சொற்களின் அடிப்படையிலே சமயம் என்ற சொல் முகிழ்க்கிறது, புறக் கருவிகளாக இருக்கிற பொறிகளையும் அகக்கருவிகளாக இருக்கிற புலன்களையும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல், இவற்றேடுள்ள தொடர்பிலிருந்து விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை ஆகியவற்றேடு இயைபு படுத்தி, உயிரை வளர்த்து உயர்த்துவதே சமயத்தின் குறிக்கோள். உயிர்வாழ்க்கை அகநிலையிலும் புறநிலையிலும் வளம் பெறச் சமய வாழ்க்கை தேவை. சமயம் சார்ந்த வாழ்க்கையே வாழ்க்கை! சமயச் சார்பில்லாத வாழ்க்கை சவலை வாழ்க்கை. ''பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே'' என்றும், ''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்றும் அருளியுள்ளமை அறிக. ஆதலால், வாழ்வு முழுமை பெற, இம்மை மறுமை மட்டுமின்றி எழுமையும் அன்பும் அருளும் இன்பமும் அமையச் சமயம் தேவை.

**வாழ்வியலும் வழிபாடும்:**

வாழ்வு, குறைவற்றதாக நிறைவுடையதாக அமைய வேண்டுமென்பதே அனைத்துயிர்களின் விருப்பம். ஆனுல் நடத்துவதோ துன்பங்கலந்த வாழ்க்கை. ஏன் முதலில் நன்று தீது, பகுத்தாராயும் திறன் வேண்டும். மானிட வாழ்வு சிறக்க, கடவுளின் துணை தேவைப்படுகிறது. 'தனித்துணை' என்று இறைவனின் துணையைச் சிறப்பித்துக் கூறுவார் மாணிக்க வாசகர். ஒருகுறை பிறிதொரு குறையை நீக்க இயலாது. கடவுள், குறைவிலா நிறைவு! கடவுள் வாலறிவு! கடவுளே நன்று, கடவுளே அன்பு, கடவுளே, இன்பம்! ஆதலால் இந்த உயரிய இயல்புகளில் குறைபாடுடைய உயிர்கள், கடவுள் தன்மைகளை நிறைநலம் பயக்கும் தன்மைகளை அடைய முயற்சி செய்தலே வாழ்க்கையின் குறிக்கோள்!

நோக்கம்! இந்த உயரிய குறிக்கோளை அடைவதற்குச் சமயம் துணை செய்யும்! தனிமனிதனைச் சமயம் வளர்த்து, சமுதாய வாழ்வுடையவனாக்கி அன்பினாற்றலும், அருளொழுக்கமும் உடையோனாக மாற்றுகிறது. இதற்குத் துணை செய்வதே வழிபாடு. கடவுள் வழிபாடு என்பது வெறும் சடங்கன்று. வழிபாடு என்பது உயிர்ப்புள்ள ஒரு முயற்சி! அறிவார்ந்த ஆள்வினை! எண்ணுதல், நினைத்தல் ஆகிய அகநிலைப்பயிற்சிகள் மூலம் ஆன்மா தன்னை உயர்த்திக் கொள்வதற்குத் துணை செய்வது வழிபாடு! வழிபாடு கடவுளை முன்னிறுத்திச் செய்யப்படுவது உண்மை. ஆனால், வழிபாட்டின் பயன் கடவுளுக்கன்று, வழிபாட்டின் பயன் முழுதும் மனிதத்துக்கேயாம்.

**திருவுருவ வழிபாடு:**

கடவுள் ஒரு பொருள்; அஃதோர் ஆற்றல்; வரம்பில் ஆற்றல்! கடவுள் ஓர் அறிவுப் பொருள்; வாலறிவுப் பொருள்! கடவுள் ஓர் இன்பம்; எல்லை கடந்த இன்பம்! கடவுள் ஓர் அறம்; அறங்களுக்கெல்லாம் சிறந்த அறம்! கடவுள் ஒரு நீதி; நிலவும் நீதிகளுக்கெல்லாம் தலையாய நீதி. இங்ஙனம் உயர்வற உயர்ந்துள்ள கடவுட் பொருளோடு, உயிர் ஓர் உயிர்ப்புள்ள உறவைக் கொள்ளும் பொழுது உய்தி பெறுகிறது; உயர்கிறது; அக்குறிக்கோளும் கைகூடுகின்றது. இந்த உறவு எளிதில் கைகூடுவதன்று. கடவுளைச்சிந்திக்க வேண்டும்! கடவுள் உருவமில்லாதவர். ஆனால் எல்லையற்ற ஆற்றலும் நிகரற்ற அருளும் இருக்குமாயின் எந்த ஒரு பொருளும் அது விரும்பும் உருவத்தைப் பெற இயலும். ஆயினும் கடவுளுக்கு உருவம் தேவையில்லை. மானிடரில் கூட வளர்ந்த சிலர், ஞானத்தாலேயே இறைவனைத் தொழுவர். அவர்களுக்கும் உருவம் தேவைப்படாது. ஆனால், சராசரி மனிதர்கள் – சிந்திக்க இயலாதவர்கள், பற்றுக்கோடு ஒன்றின்றிச் சிந்திக்கமாட்டாதவர்கள் எண்ணிக்கையில் மிகப்பலர். இவர்கள் சிந்திப்பதற்குப் பற்றுக்கோடாக விளங்க வேண்டுமென்றே இறைவன், அருளும் நோக்கத்துடன் திருவுருவங்களை இடமாகக் கொண்டு எழுந்தருளி அருள் வழங்குகின்றான். திருவுருவ வழிபாடு வளரும் சமுதாயத்திற்குத் தவிர்க்க இயலாதது, தேவையும் கூட! மக்கட் சமுதாயத்தில் திருவுருவ வழிபாடு தோன்றிய பிறகு தான் திருக்கோயில் நாகரிகம் கால் கொள்கிறது. திருக்கோயில் நாகரிகம் தொடங்கிய காலந்தொட்டு மனிதகுல வாழ்வில் ஒரு புதிய ஆற்றல் மிக்க சமுதாய உணர்வு அரும்புகிறது. திருக்கோயில் ஒரு மாபெரும் சமுதாய இயக்கத்திற்கு மையமாக விளங்குகிறது.

**திருக்கோயில் ஏன்?**

கடவுள் எங்கும் நிறைந்தவர்; எல்லாப் பொருள்களிடத்தும் தங்கியிருப்பவர்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே''

என்று மாணிக்கவாசகர் கூறுமாறு போலவும்,

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஓரூர னல்லன் ஒருவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொணாதே''

என்று அப்பரடிகள் கூறுமாறு போலவும், இறைவன் இன்ன இடத்தன், இன்ன ஊரினன் என்று எடுத்தியம்ப இயலாது. அவ்வாறு எங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனுக்குத் திருக்கோயில் ஏன்? திருக்கோயில் கடவுள் எழுந்தருளியுள்ள இடம்! ஆனால், கடவுளுக்காகத் திருக்கோயில்கள் அல்ல! பொதுவாக உயிர்க்குல ஈட்டம், சிறப்பாக மானிடகுல ஈட்டம் இறைவனைக் காண, அதனுடன் கலந்து உறவாட இறை நலன்களைப் பெறத் துணையாய் அமைவது திருக்கோயில், அடுத்து. வாழப் பிறந்த மனித இனம் ஒன்றுபடவும். ஒப்புரவு நலன்கள் பெற்றுச்சிறந்து வாழ்ந்திடவும் திருக்கோயில் துணையாய் அமைவது. திருக்கோயிலை மையமாகக் கொண்டு இறைமத்தத்துவம் மேலாண்மை செய்தது! இறைமைத் தத்துவத்தின் வழிநின்ற மக்கள், சமுதாயத்தை ஒருங்கிணைக்க — சமுதாய மேம்பாட்டிற்குரிய நெறிமுறைகளைக் காண - சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு உருவம் கொடுக்கத் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு இயங்கினர்; செயல்பட்டனர். ஏன்? அப்பாலுக்கு அப்பாலாக விளங்கிய கடவுளையே சமுநாய உறுப்பாகக் கொண்டு வந்து செயல் படுத்தினர், ஏவல் கொண்டனர். இஃதொரு அருமையான தத்துவம்!

''அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

என்ற பாடல் இறைவனை உற்ற அன்புடைய உறவாகவும் சுற்ற மாகவும் கொண்டு போற்றும் பண்பு நோக்கத்தக்கது.

ஆதலால், தமிழர் நோக்கில் குறிப்பாகச் சைவ வைணவ சமய நோக்கில் திருக்கோயில்கள் கடவுள் எழுந்தருளியிருக்கும் இடங்கள் மட்டுமல்ல, சமுதாய மையங்கள்! சமுதாயத்தின் இயக்கம்! இதனாலேயே திருக்கோயில்களுக்குச் சிறப்பு வந்தடைந்தது. திருக்கோயில்களிடத்து மக்கள் அளவற்ற நம்பிக்கை வைத்தனர். அளவற்ற கொடைகளை வழங்கி, திருக்கோயில்களைச் சார்ந்த அறக்கட்டளைகளின் முதலீட்டைப் பெருக்கினர். முடியுடை அரசர்கள் நிவந்தங்கள் வழங்கினர்; இறையிலி நிலங்களை வழங்கினர். திருக்கோயில் பத்திமையின் விளைநிலம்! திருக்கோயில் வாழ்க்கைக்குக் காப்புறுதி வழங்கிய முறை மன்றம்! தமிழ்நாட்டு வரலாற்றில் திருக்கோயில் ஏற்றபங்கு அளவற்றது! காலத்தை வென்று நிற்கக்கூடியது! இன்றும் நெறியல்லா நெறியிற் செல்லும் தமிழகம், நெறிப்பட நின்று நேர்பட ஒழுக விரும்பின் திருக்கோயில் சார்பே தேவை. திருக்கோயில் சமுதாய இயக்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற பங்கின் அடிப்படையில்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மூதுரை பிறந்தது.

**சமுதாய மையம்:**

தமிழ்நாட்டில் நகர

2

அமைப்பு, சிற்றூர் அமைப்பு முறை, வளர்ந்த ஒன்று! நடுவூரில் திருக்கோயில் உயர்ந்து விளங்கும்! திருக்கோயிலைச் சுற்றி நான்கு புறமும் மக்கள் சூழ்ந்து வாழ்வர், நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் திருக்கோயிலுக்குள் வந்து குழும, நான்கு திசைகளிலும் பெரிய வாயில்கள்! ஊர் முழுதும் ஒலித்து அழைக்கும் மணிகள்! இஃதோர் அற்புதமான அமைப்பு! மாலை நேரத்தில் ஊர்மக்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினருடன் அணிபெற ஆலயத்திற்கு வருதலும் வணங்கி, மகிழ்தலும் சிறந்த காட்சி! இறைவழிபாடு முடிந்தவுடன் இங்குமங்குமாகத் தனித் தனியாகவும் கூட்டமாகவும் ஒருவர் மற்றவரை நலம் விசாரித்தும், கலந்தும் களித்தும் பேசுதலும் மகட் கோடல் முதலிய நிகழ்வுகள் பற்றிப் பேசுதலும் இன்றைக்கும் நடைபெறும் நிகழ்ச்சி. திருக்கோயிலில் ஒரு மனப்பாட்டுடன் மக்கள் கூடுவர், களித்தும் கலந்தும் பேசுவர். அதனால் திருக்கோயில் வளாகத்துக்குள் அன்பு செறிந்த, அருள் நலம் கனிந்த மனித உறவு வளர்கிறது; மனித நேயம் வளர்கிறது சிலசமயங்களில் அங்கேயே ஒரு கூட்டம் கூடுகிறது. கிராமத்தின் பொது நிகழ்வுகள் கலந்து பேசப்படுகின்றன; குடிமராமத்து நாள் நிர்ணயித்தல், தண்ணீர் வரும் கால்கள் வெட்டுதல், நல்லேர் கட்ட நாளும் நாழிகையும் முடிவுசெய்தல், விதை தெளிக்க நாள் முடிவு

திருவாவடுதுறையில் ஒரு வைத்தியக் கல்லூரி இருந்தது என்று விக்கிரம சோழன் கல்வெட்டுக் (கி. பி. 1131) கூறுகிறது. "சங்கரதேவின் அறச்சாலை" என்ற உணவுச்சாலையில், உணவு அளிக்கப் பெற்றவர்களில் வைத்தியக் கல்லூரிமாணவர்களும் இருந்தனர். "முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலை"யிலும் மருத்துவ நூல் படிப்பவர்களுக்கும் இலக்கணம் படிப்பவர்களுக்கும் உணவு அளிக்கப் பெற்றது என்றும், அக்கல்வெட்டுக் கூறுகிறது. காஞ்சிபுரம் பக்கத்தில் உள்ள திருமுக்கூடல் கல்வெட்டு, கி. பி. 1067 இல் திருக்கோயில் வருமானத்திலிருந்து வீரசோழன் என்ற பெயரால் மருத்துவசாலையும் மருத்துவம் கற்பிக்கும் கலாசாலையும் நிர்வகிக்கப்பெற்றன. அவற்றில் ஓராண்டுக்குத் தேவையான மருந்து வகைகள் இருந்தன. ஒரு மருத்துவனும் சல்லியக் கிரியை — அறுவை மருத்துவம் பண்ணுவானும் அங்கு இருந்தனர். நோயாளிகட்குத்துணையாக மருத்துவப் பணிமகளிர் – தாதியர் பலர் இருந்தனர்; மருத்துவருக்குப் பெயர்" கோதண்டராமன் அஸ்வத்தாமபட்டன்" என்று பல்வேறு செய்திகளைக் குறிப்பிடுகிறது.

மேலும் தஞ்சையில் குந்தவைப் பிராட்டியாரால் அவர் தந்தை முதல் இராசராசன் நினைவாக இலவச மருத்துவச்சாலை நிறுவப் பெற்றதாக அறிகிறோம். திருவிசலூர், திருப்புகலூர், திருச்சிமாவட்டம் கோவந்தபுத்தூர், குன்றத்தூர், மைசூரைச் சார்ந்த சுகடூர் முதலிய இடங்களில் எல்லாம் திருக்கோயில்கள் மருத்துவச்சாலைகள் அமைத்து மக்கட் பணிபுரிந்தமையைத் தெள்ளத் தெளிய அறியலாம்.

**ஊராட்சி மன்றம்:-**

பழங்காலத் தமிழராட்சி முறை இன்றைய ஆட்சிமுறையைப்போல அதிகாரம் ஓரிடத்தில் மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையன்று. அதிகாரங்கள் முறைப்படுத்தப் பெற்று, பரவலாக்கப் பெற்றிருந்த ஊராட்சி மன்றங்களே ஊராட்சியின் மேலாண்மைக்கு பொறுப்பேற்றிருந்தன. அரசு, மக்களைச் சலுகைகளால் வளர்க்கவில்லை; உரிமைகளால் வளர்த்தது. திருக்கோயில்களில் ஊராட்சி மன்றங்கள் அமைந்திருந்தன. அவை ஊராட்சியின் மேலாண்மைக்குரிய பணிகளைத்திறம்படச் செய்தன. நீர்நிலைகளை ஆழப்படுத்துதல், நீர்நிலைகளைத் தூய்மையாகப் பேணுதல், காடுகள் வளர்த்தல், அவ்வப்பொழுது மக்கள் மன்றத்தில் தோன்றும் சிறிய பெரிய பூசல்களைத் தீர்த்து வைத்தல் முதலியவைகளை ஊராட்சி மன்றங்கள் திறமையாகச் செய்து வந்துள்ளன. திருக்கோயிலைச் சுற்றிவளர்ந்து வந்துள்ளஆட்சி முறையில் நிறைவான மக்களாட்சித் தேர்வு முறை இடம்பெற்றிருந்தது. "குடவோலை"யின் மூலம் மக்கள் தங்கள் ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்வு செய்தனர். அரசு யாரையும் ஊராட்சியில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நியமித்ததில்லை. பழங்காலத் திருகோயில்கள் சுதந்திரமான ஆட்சி உரிமைகள் பெற்ற மக்கட் பணிமனைகளாக இருந்தன என்பது நினைவுகூர வேண்டிய செய்தி.

**அற்றூர்க்கு உதவும் நிறுவனம்:-**

திருக்கோயில்கள் அற்றூர்க்கும் அலந்தார்க்கும் உதவும் நிறு

வனங்களாக இருந்தன. குறிப்பாக வறியோர்க்கு உதவும் அமைப்புகளாக விளங்கின, தருமி என்ெறாரு ஆதி சைவன் திருமணம் செய்து கொள்ள வாய்ப்பின்றி வறுமைக்கு ஆட்பட்டிருந்தான். மதுரைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருந்த ஆலவாயண்ணல் கவிஞனுகிச் சங்கப்புலவனுகி நக்கீரனேடு வாதாடி பாண்டியனிடம் பொற்கிழி பெற்றுத் தருமிக்குத் தந்து உதவினன். திருஞானசம்பந்தர், அப்பரடிகள், சுந்தரர் ஆகியோரும் கூடப் பல சமயங்களில் பசித்துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர் அப்பொழுதெல்லாம் ஆங்காங்கு திருக்கோயில்களிலிருந்த இறைவன் அவர்களுக்குச் சோறும் தண்ணீரும் தந்து உதவியிருக்கிறான். திருஞானசம்பந்தர் பொன் வேண்டிக் கேட்டபொழுது திருவாவடுதுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனும் பொன் கொடுத்து உதவியதை அறிக. இங்ஙனம் இறைவன் மட்டுமின்றித் திருக்கோயிலைச் சார்ந்திருந்த ஊர்ச்சபைகளும் உதவிகளைச் செய்துள்ளன.

**நீதி சபை:-**

மானிட வாழ்க்கையென்பது பிரச்சனைகளுக்கு உரியதுதான். பிரச்னைகளே இல்லாத வாழ்க்கை சாரமற்றது; சுவையற்றது. ஆனால் வாழ்க்கையில் பிரச்சனைகளைச் சந்திக்கின்றபொழுது மனிதன் நிதானமாக நின்று சிந்திக்கத் தவறக் கூடாது; அறிவை இழந்துவிடக் கூடாது; ஆத்திரப்படக்கூடாது. எந்தச் சூழ்நிலையிலும் வாழ்க்கையின் செயற்பாடுகள் நீதியொடு தொடர்புடையனவாக அமைதல் வேண்டும். நமது சமயமே " நீதி " யென்று பெயர் பெற்றது. மாணிக்கவாசகர் இறைவனை நீதியென்றே அழைப்பர்.

" பங்கயத் தயனுமாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே "

என்பது திருவாசகம். திருக்கோயிலை மையமாகக் கொண்டு நீதி விளங்கியது. திருக்கோயில்களில் நீதி வழங்கு சபைகளிருந்தன. அந்தச் சபைகள் வழங்கிய நீதிகள் வரலாற்றுப் புகழுடையன. திருகோயில் தத்துவத்தில் கடவுளும் நீதிக்குக் கட்டுப்பட்டவர். கடவுளும் தனக்கு ஏதாவது வழக்கு இருப்பின் தானே அடாவடித்தனமாக அடித்துப் பிடுங்கமுடியாது. உவமையில்லாத தலைவனும் கூடத்திருக்கோயிலில் விளங்கும் பஞ்சாயத்தார் முன்னே நீதி கேட்டு நிற்கத்தான் வேண்டும்! திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கும், நற்றமிழ்ச் சுந்தரருக்கும் இடையேயிருந்த வழக்கைக் கூறி, இறைவன் திருவெண்ணெய் நல்லூர்ப் பஞ்சாயத்தார் முன்னே நீதி கேட்டு நின்றமையை அறிக. அது போலவே செட்டிப் பெண்ணுக்கு நலம் செய்ய நினைத்த திருப்புறம்பயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், திருக்கோவிலில் விளங்கிய நீதி சபையின் முன்னல் சாட்சி கூறி உதவி செய்ததை ஓர்தல் வேண்டும். அது போலவே மது

"இறைவர் விரைவின் எழுந்தருள,
எய்தும் அவர்கள் பின் தொடர,
அறை கொள் திரைநீர் தொடர்சடையில்
அரவு தொடர, அரிய இளம்
பிறை கொள் அருகு நறை இதழிப்
பிணையல் சுரும்பு தொடர, உடன்
மறைகள் தொடர வன்தொண்டர்
மணமும் தொடர வரும் பொழுது"

என்று ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறார், சேக்கிழார் பெருமான். அதிலும், முதல் தடவை பரவையார் உடன்படாமற் போகத் தோல்வியைச் சுமந்து கொண்டு ஆரூரரின் முன்வந்து நின்ற இறைவனைப்பார்க்க இரக்கமாக இருக்கிறது. சுந்தரரோ பெருமான் மனம் வைத்தால் இயலாததில்லையென நம்புகிறார். அது மட்டுமா? இறைவன் பாற் கொண்டிருந்த கிழமைமிகுதியால் உயிர் தரியேன் என்று மிரட்டுகிறார் மீண்டும் இறைவன் பரவையார் இல்லம் நோக்கி நடக்கிறார் இத்தகு நிகழ்வுகள் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன? காதல் மணம் புரிந்தவர்கள் பிரிதல் கூடாது; என்ற உயரிய தத்துவம் திருக்கோயில் தந்த திருமண வாழ்க்கைத் தத்துவம் என்பதே! இந்தத் தத்துவம் மனையற வாழ்க்கைக்கு அரணாகவும் காதலின்பத்திற்கு ஊற்றாகவும் விளங்குவது அறிக.

**தோழமை வாழ்க்கை:-**

காதல் வாழ்க்கைக்கு அடுத்தது தோழமை வாழ்க்கை. இல்லை! காதல் வாழ்க்கையினும் மிகவுயர்ந்தது தோழமை வாழ்க்கை. "நட்பிற் சிறந்தது ஒன்றில்லை" என்று வள்ளுவம் கூறும். திருக்கோயில் இயக்கச் சூழ்நிலையில் நட்புக்கு வாயில்கள் அமைந்தன; நட்பும் வளர்ந்தது. திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் நற்றமிழாரூரருக்குத் தன்னைத் தோழமையாகத் தந்ததமையை நாடறியும். தோழமை எதற்காக? 'மண்மீது விளையாடடா'த் தோழமை துணை செய்ய வேண்டும். சுந்தரர்க்கு இறைவன் தோழனாக நின்று பொன் தந்தான்; பூவையர் தந்தான்; வழக்கமாக எழுந்தருளும் திருக்கோயில் திருவுருவத்தினை நீக்கி மகிழின் கீழ் இருந்தான்! தூது சென்றான்; ஆட்களும் பிடித்து அமர்த்தினான்.: சுந்தரர் "பித்தன்" என்றும் "மகத்திற் புக்கதோர் சனி" என்றும் திட்டித்தீர்த்ததை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டான். இவை மட்டுமா? சேரமான் பெருமானை அறிமுகப்படுத்தி, மற்றொரு தோழனுக்கிக் கொடுத்தான். அதன் வாயிலாக யானை ஏற்றம்' குதிரை ஏற்றம் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபடும் வாய்ப்பினைத் தந்தான். ஆயினும் தமக்கினியதோழராகிய ஆரூரர்க்கு வேண்டிய பொன்னைத் தாமே கொடுக்கவேண்டும். மற்றவர்களிடம் வாங்கக் கூடாது; என்றநட்புறவின்முதிர்ச்சியால் திருமுருகன் பூண்டித் திருக்கோயில் வளாகத்தில் வழிப்பறியும் செய்து விளையாடுகின்றான். என்னே அற்புதம்! வாக்கு மனத்துக்கு அப்பாற்பட்ட ஆற்றல் மிக்க பொருளாகிய கடவுள் வாழ்க்கையின் முதலாக மட்டு

மல்லாமல் வாழ்க்கையின் இனிய தோழனுகி, உற்றுழி உதவியும் விளையாடியும் வாழ்க்கையை உய்த்துச் செலுத்தத் துணையாக இருந்த திருக்கோயில் தத்துவம் ஈடு இணையற்றது.

**அன்பின் இயக்கம்:-**

திருக்கோயில் தத்துவம் ஒரு அன்பின் இயக்கம், திருக்கோயில் அன்பினுல் எழுந்தது. திருக்கோயில் அன்பினுல் வளர்ந்தது. திருக்கோயில், வாழும் மனித குலத்தை அன்பினுல் இணைத்தது; ஒருங்கிணைத்தது. அன்பு ஒரு சொல்லன்று. அஃது ஓர் ஆற்றல்! அன்பு ஒரு நுகர் பொருள்! இறைவன் உயிர்களிடத்திலுள்ள அன்பை நுகர்வதற்காக எழுந்தருளிப் போந்தமையை எண்ணற்ற வரலாறுகளில் காண முடிகிறது. திருப்பனந்தாள் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தாடகை என்ற பிராட்டியார் தாமே மலரெடுத்துத் தொடுத்த மலர்மாலைகளைச் சார்த்திப் பூசித்து வருகிறுர். தொடக்க காலத்தில் திருக்கோயில்களில் இன, குல வேறுபாடின்றி, ஆண்-பெண் வேறுபாடின்றி, அனைவரும் பூசிக்கலாம் என்ற நெறிமுறை இருந்தது! அந்தக்காலத்தில் அம்மையார் பூசித்தார். ஒரு நாள் இறைவனுக்குத் தாடகைப் பிராட்டியாரின் அன்பைத் துய்த்து மகிழவும் மற்றவர்க்குப் புலப்படுத்தவும் வேண்டும் என்ற உணர்வு பிறந்தது. தாடகையார் மலர் மாலை எடுத்து இறைவனுக்கு சார்த்தப்புகும் நேரத்தில் அவர்தம் இடுப்பு உடை நெகிழ்கிறது. தாடகையாருக்கு அறச்சங்கடம். தாடகையாரின் அறச்சங்கடத்தை அறிந்த பெருமான் குனிந்து மாலை ஏற்றுக் கொள்கிறுர். அதனுல் தாடகையாரின் இரண்டு நோக்கங்களும் நிறைவேறிவிட்டன. பெருமான் திருமேனியை வளைத்தது, அன்பின் ஆற்றல் அல்லவா? இங்ஙனம் திருமேனி வளைந்த இறைவன் நிமிராமலேயே இருந்து விட்டான். இதனைக்கண்ட சோழப்பேரரசு பெரிய சங்கிலிகளைப்போட்டு யானைகளைக் கட்டியிழுக்கச் செய்தது! இறைவன் திருமேனியோ நிமிரவில்லை; இந்தச் செய்தி திருக்கடவூரில் வாழ்ந்த குங்கிலியக்கலயர் என்ற பெருமானுக்கு எட்டுகிறது, அவர் திருப்பனந்தாள் வருகிறுர். இறைவனைக் கூர்ந்து பார்க்கிறுர்! குங்கிலியக் கலயர் அன்பில் விளைந்த ஆன்மா உடையவர். அவர் இறைவன் திருமேனி நிமிர்ப்பதற்காகத் தனது கழுத்தில் ஒரு கயிற்றைப் போட்டுக் கொண்டு இழுக்கிறுர்! உடன் பெருமான் திருமேனி நிமிர்கிறது. ஏன் நிமிர்கிறது? பெருமானையும் குங்கிலியக் கலயரையும் பிணைத்திருந்த கயிறு குங்கிலியக் கலயரின் உடலை வருத்துமே என்று கருதிப் பெருமான் தன்திருமேனி நிமிர்ந்தார். தாடகையார் மானம் காப்பாற்ற வளைந்தார்; குங்கிலியக் கலயர் உடலைப்பாது காக்க நிமிர்ந்தார்.

“............ மாலை சாத்தும்
தாடகை மானம் காப்பான் தாழ்ந்து, பூங்கச்சிட்டு
ஈர்க்கும்
பீடுறு கலயன் அன்பின் நிமிர்ந்த எம்பிரான் ஊர் ....”
என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

திருநீலநக்க நாயனுருடைய மனைவி, சிலம்பி நீங்க, வாயால் ஊதியதை அன்பின் விளைவாக ஏற்றுக்கொண்ட அருமைப்பாட்டையும் பிறிதொரு நிகழ்விற் காண்கிறோம். கண்ணப்பர் அன்பினுல் விளைந்து அன்பே உருவமாக விளங்கியதைத் திருக்காளத்தித் திருக்கோயிற் சூழலில் காணமுடிகிறது! திருக்காளத்தித் திருக்கோயிற் சூழலில் விளைந்த அற்புதங்கள் எண்ணற்றவை. அவையனைத்தும் ஆன்மாக்களை உயர் நெறியில் உய்த்துச் செலுத்தக் கூடியவை!

**திருத்தொண்டுப் பயிற்சி:-**

திருக்கோயில் உயர்ந்து
ஆய அன்பர்தாம் அணிமதில்
சண்பையில் அமர்பெருந் திருத்தோணி
நாயனுர்க்கு நற்றிருப்பணி ஆயின
நாளும் அன்பொடு செய்து
மேய அத்திருத் தொண்டினில்
விளங்குவார் விரும்பி வந்தணைவார்க்குத்
தூயகைத் திருத் தொண்டினில்
அவர் தமைத் துறை தொறும் பயில்விப்பார்.

என்று பெரியபுராணம் பேசுகிறது. (பெரி. கணநாதர்-2)

விளங்கியது தொண்டின் அமைப்பால்! திருநெறிய திருத்தொண்டு திருக்கோயிலைக் கண்டது. திருக்கோயில் திருநெறிய திருத்தொண்டை வளர்த்தது. திருக்கோயிலைச் சார்ந்து நடைபெற வேண்டிய தொண்டுகள் செய்வதற்குப் பயிற்சிப்பள்ளி ஒன்றைக் கணநாதநாயனுர் நடத்தினுர். திருக்கோயிலைச் சார்ந்து, திருமாலை தொடுத்தல் முதல் சுவை மிக்க திருவமுது படைத்தல்வரை பல்வேறு தொண்டுகள் நடைபெற்று வந்துள்ளன. இதனை,

எனவே திருக்கோயில், தொண்டு இயக்கத்தின் மையம் என்பதறிக. திருக்கோயிலைச் சார்ந்து வாழ்கிறவர்கள் வளமாக வாழத் துறை தோறும் வாயில் அமைத்து வழி செய்தது திருக்கோயிலேயாம்!

உடல் ஊனமுறுதல் வருந்தத்தக்க ஒன்று! உடல் ஊனமுற்றோர் பக்கம் கனிந்த அன்பைக் காட்டவேண்டும்! அவர்தம் வாழ்க்கைக்குரியன, எல்லாம் செய்யப் பெறவேண்டும்: இந்த உணர்வு திருக்கோயில் வளாகத்தில் அரும்பி மலர்ந்திருந்தது. திருவாமாத்தூர்த் திருக்கோயிலில், கண்பார்வையிழந்தோர் 16 பேர் உண்டியும் உறையுளும் பெற்றுத் திருமுறை பயின்றனர்— ஓதினர் என்பதை அறிக. கண்ணிழந்த சுந்தரர்க்கு இடர்ப்பாடின்றி நடக்க ஊன்றுகோல் கொடுத்துதவியது திருவெண்பாக்கத்துத் திருக்கோயில் வட்டம் என்பது ஓர்க. சமுதாயத்தில் பலவீனர்களாகிய உடல் ஊனமுற்றோர்க்குக் காப்பகமாகவும் திருக்கோயில் விளங்கி வந்தது.

**முறை மன்றம்:-**

வழக்குகள் வாராமல் வாழ்

தல் நன்று; வரவேற்கத்தக்கது. ஆனால், மனித நேயத்தை விடப் பொருளும் நுகர்வும் முதன்மை பெற்று விடும் பொழுது, வழக்குகள் வராமற் போகா. வழக்கிற்குப் போகக் கூடாது; அடாவடித்தனமான வழக்குகள் வந்து விட்டால் சந்திக்காமலும் இருத்தல் கூடாது.. ஆனால், உலகியல் மரபில் வளமுடையோர் வளமில்லாதாரை வழக்கில் மாட்டி வைத்தே அமுக்குகின்றனர்; அழிக்கின்றனர். வசதியும் வாய்ப்புமில்லாதார் வழக்காட முடியாமல் தவிக்கின்றனர். இதனைக் கருதித்தான் இன்று வாய்ப்பற்றவர்களுக்கு வழக்காட "இலவசச்சட்ட உதவி" என்ற இயக்கம் தோன்றியிருக்கிறது. அரசே இந்த இலவசச் சட்ட உதவியை வழங்குகிறது. பழங்காலத்திலேயே நமது திருக்கோயிலைச் சார்ந்த வாழ்க்கை முறையில் இந்த முறை, கால் ஊன்றியிருக்கிறது. மதுரைத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மாமனாக வந்து வழக்காடி வெற்றி பெற்றுத் தந்துள்ளான். திரும்புறம்பயத்தில் திருமணம் செய்து கொண்ட செட்டிப் பெண்ணுக்கு, மதுரை இறைவன் சிவலிங்கத்தையும், கிணற்றையும், வன்னிமரத்தையும் மதுரைக்கு வந்து சாட்சியமாக்கி அவளது துன்பம் துடைத்தான். திருக்கோயில் சூழலில் வழக்குகள் வரா வாழ்க்கைகள் நடந்தன. ஒரோவழி வழக்குகள் வந்த பொழுது எளிதில் தீர்வு காணப் பெற்ற அருமைப்பாட்டினையும் அறிக.

**தொழிலில் சமத்துவம்:-**

திருக்கோயிலைச் சார்ந்து வாழ்ந்த சமுதாய அமைப்பில் பல்வேறு குல அமைப்புகள் இருந்தன. அவற்றுக்கிடையே சிற்சில வேறுபாடுகளும் இருந்தன. குலநெறி முறைகளுக்கேற்பப் பழக்கங்கள் அமைந்திருந்தன; வழக்கங்கள் அமைந்திருந்தன. ஆயினும் அவர்களுக்குள் அற்புதமான பொதுமை நிலவியிருந்தது. அவர்களுக்கிடையில் பிரிவினை இல்லை; பிரிவினை வகைப்பட்டபகைமை இல்லை. பல்வேறு குலப் பிரிவினரும் தத்தம் குலமரபுகளுக்கேற்ப அவரவர் தத்தம் தொழில்களை இயற்றி வந்தனர். சமுதாயம் அமைதியாக இயங்கிக்கொண்டிருந்தது. நம்பிக்கையும் நல்லெண்ணமும் யாண்டும் நிலவியிருந்தன. குலப்பிரிவினைகள் உறவுக்கும் உடனிருந்து உண்ணுதலுக்கும் தடையாக இருந்ததில்லை. ஏன்? திருமணத்திற்குக் கூடத் தடையாக இருந்ததில்லை. ஆதி சைவ குலத்திற் பிறந்த ஆரூரர், உருத்திர கணிகையர் குலத்தைச்சார்ந்த பரவையாரை மணக்கின்றார்; வேளாளர் குலத்தைச் சார்ந்த சங்கிலியாரை மணக்கின்றார்; அந்தணர் குலத்தைச் சார்ந்த அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை ஞானாசிரியராக ஏற்றுக் கொள்கின்றார். ஆதி திராவிடர் வகுப்பினைச் சார்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருஞான சம்பந்தருக்கு யாழ் வாசிக்கின்றார். அந்தத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருநீலநக்க நாயனாரின் வேள்விச்சாலையில் தங்கியிருக்கின்றார்

"நின்ற அன்பரை நீலகண்டப் பெரும்பாணர்க்கு
இன்று தங்க ஓர் இடங் கொடுத்தருளுவீர் என்ன

நன்று மின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க்கு இடம் கொடுத்தனர் திருமறையோர்''
என்பது திருத்தொண்டர் புராணம்.

நற்றமிழ் ஆரூரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் உற்ற தோழராக விளங்குகின்றனர். அப்பரடிகளும் திருஞான சம்பந்தரும் முருக நாயனாரும் உடனிருந்து உண்டு பயின்று வாழ்கின்றனர், திருப்புகலூர்த் திருக்கோயில் வளாகத்திற்குள்! சேக்கிழார் இந்நிகழ்வை ''உடனுறைவின் பயன் எய்தினார்'' என்று பாராட்டுவார். திருக்கோயில் தத்துவத்தில் குலவேற்றுமைகள் இருந்தன. ஆனால், அவற்றைக் கடந்து பொது உறவு வளர்ந்தது! வேற்றுமையின்றி அவரவர்தம் தொழில்களை இயற்றினர்! அஃதோர் ஒப்பற்ற சமுதாயம்! ஆம்! திருக்கோயிலை மையமாகக் கொண்டு வாழ்ந்த சமுதாயம், ஒப்பற்ற சமுதாயம்!

**நீர் நிலைப் பாதுகாப்பு:-**

மனித வாழ்க்கைக்குத் தண்ணீர் இன்றியமையாதது! ''நீரின்றமையாது உலகு'' என்று திருக்குறள் கூறும். திருக்கோயிலினின்றும் பிரிக்கப்படாது உடனிருந்து இயங்குவது தீர்த்தம். அதாவது திருக்குளம். தீர்த்தத்தைச் சார்ந்தே திருக்கோயில் விளங்குகிறது. திருக்கோயில்களைச் சார்ந்து மிக அகலமாகவும் ஆழமாகவும் எழிலுற அமைந்துள்ள திருக்குளங்களைக் காணும் பொழுதெல்லாம் நமது சமுதாய முன்னோடிகள் சமுதாய அமைப்பை நிர்மாணித்ததிறன் நமக்குப் புலப்படுகிறது. ஆற்றங்கரைகளிலும் பெரிய திருக்குளங்களின் கரைகளிலும் திருக்கோயில்கள் விளக்கமுற்றன. இந்தத் திருக்குளங்களைப் பாதுகாத்தல், தூய்மையாகப் பேணுதல் திருக்கோயிலின் கடமையாக இருந்தது. மானிடர் உடல் வெப்பம் தணியத் தீர்த்தத்தில் மூழ்கினர். ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவ வெப்பம் தணிய இறைவனின் திருவருட்புனலில் மூழ்கினர். இத்தகைய திருக்கோயில்களின் திருக்குளங்களை அவ்வப்பொழுது தூர்வையெடுத்துத் தூய்மைப்படுத்திப் பாதுகாத்து வந்துள்ளனர். திருவாரூர்க் கமலாலயம் என்று புகழ்பெற்ற திருக்குளத்தை, கண்ணிரண்டுமில்லாத குருடராக வாழ்ந்த தண்டியடிகள் தூர்வையெடுத்துத் தூய்மை செய்த அரும் பெரும் சாதனையைச் சேக்கிழார் செஞ்சொற் காப்பியமாக வடித்துத் தந்துள்ளார்.

**விழவுமலி வாழ்க்கை:-**

தமிழ் மக்கள் விழாக்கள் எடுப்பதில் விருப்பமுடையவர்கள். விழவு நிறைந்த வாழ்க்கை தமிழர் வாழ்க்கை. திருக்கோயில் நாகரிகம் மிகவும் சிறப்புற்று விளங்கியது, மருத நிலத்திலேயேயாம். மருத நிலத்து மக்களுக்கு இயல்பாகவுள்ள பழக்கம் விழா வயர்த்தல். திருவாரூர்த் திருக்கோயிலில் விழா நிகழ்ந்ததைத் திருப்பல்லாண்டு எடுத்துக் கூறும்.

''குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி

மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழி ஆளாய்
மணம் செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடும் கூடி, எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

என்பது திருப்பல்லாண்டு! சுந்தரமூர்த்தி நாயனுர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து இருந்தநாளில், திருவாரூர் வசந்த விழாவை நினைந்து திருப்பதிகம் பாடினுர் என்பது வரலாறு. திருவாரூர் வசந்தவிழா, புகழ் பெற்ற விழா. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும்' பார்த்துப் பாராட்டிய விழா! விழாக்காலங்களில் விழா நிகழும் ஊர்களில் உள்ள இல்லங்களில் எல்லாம் விருந்தினர் சூழ்ந்து வந்திருப்பர். எங்கும் வெள்ளம் போல் கூடி ஆடவரும் மகளிரும் பெருமானுக்குத் திருவிழா எடுத்து மகிழ்வர். பெருமானின் திருவீதியுலா நையாத மனத்தினரையும் நைவிக்கும். திருத்தேர்விழா சமுதாயம் ஒருங்கிணைந்து வலிமையுடனிருப்பதை எடுத்துக்காட்டும் விழா. உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஓரணியில் நின்று தேர் இழுக்கும் காட்சி, சமுதாயம் ஓர் உருப்பெற்றுள்ள காட்சியைப் புலப்படுத்தும். எடையாலும் உயரத்தாலும் உயர்ந்திருக்கும் திருத்தேர், சூழ்ந்திருக்கும் மக்களின் ஆற்றலுக்கு அறை கூவல்! அம்மம்ம திருத்தேரின் வடம் பிடித்து இழுப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி! வாழ்க்கை எய்த்துக்களைத்துப் போகாமல் தடுக்க விழவு! நல்ல முறையில் விழவெடுக்கும் சமுதாயம் வீழா வாழ்க்கை பெறும்!

சுகாதார வாழ்வு:—

வாழ்க்கை வாழ்வதற்கே! உடம்பிற்குநோய்இயற்கையன்று! செயற்கையே! உடம்பை ''நடமாடும் கோயில்'' என்று திருமூலர் பாராட்டுவார். உடம்பை இழிந்ததென்று நினைத்து அலட்சியமாக வாழ்கின்றவர்கள் நோயை வரவழைத்துக் கொள்கின்றனர்! அதன் பிறகு வேறு வழியின்றி உடம்புக்கு அடிமையாக வாழ்வர்! ஏன் இந்த அவலம்? தூய்மையான காற்று! தூய்மையான தண்ணீர்! தூய்மையான உணவு! தூய்மையான சிந்தனை! இவற்றைக் குறித்த காலத்தில் உடம்புக்கு வழங்கினுல் உடம்பு இயங்கும்! நம் விருப்பம் போல் ஒத்துழைக்கும்! திருக்கோயில் வளாகத்தில் அகன்ற முச்சுற்றுக்கள், உயர்ந்த மதில்கள் சூழ அமைந்திருப்பதால் தூய்மையான காற்றுண்டு! எல்லாத் திருக்கோயில்களிலும் தூய்மையான தண்ணீருண்டு! இறைவனுக்குப் படைக்கும் காய்களும் கனிகளும் உணவிற் சிறந்தவை! இவற்றை உண்டு வாழ்ந்தால் ஏன் நோய் வருகிறது? திருக்கோயில் தூய்மையாக இருந்தாலும் திருக்கோயிலைச் சார்ந்துள்ள வீதிகள் எப்பொழுதாவது தூய்மை கெட்டுப் போயிருந்தால் திருக்கோயில் வளாகமும் கெடும். அதனுல் அப்பரடிகள் திருக்கோயில் வளாகத்தைத் தூய்மை செய்ததோடு திருக்கோயிலைச் சார்ந்திருந்த வீதிகளையும் தூய்மை செய்தார்.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுர வாக்கில்

சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றுளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணி செய்து
பணிந்தேத்திப் பரவிச்செல்வார் ''

என்ற இச்செய்தியினைப் பெரிய புராணம் பாராட்டும். ஆதலால், திருக்கோயிலைச்சார்ந்து ஒரு தூய்மை இயக்கம் வளர்ந்தது! சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப் பெற்றது! தூய்மையே இறைமை என்ற கொள்கை உயர்த்திப் பிடிக்கப் பெற்றது.

**தமிழாய்வு:-**

மானிடநாகரிகத்திற்குஊற்றுதாய்மொழி.தாய்மொழிச் சிந்தனையில் வளர்ந்த சமுதாயம் தான் வளரும்; மேம்பாடு அடையும்! தமிழரின் தாய்மொழியாகிய தமிழ், திருக்கோயில் வளாகத்தில் வளர்ந்தது! தமிழ், "திருக்கோயில் தத்துவத்திற்கு உருக் கொடுத்தது. சங்கப்புலவர்களின் தலைவனாக இறைவன் அமர்ந்து தமிழை ஆய்வு செய்தனன். அவன் மட்டுமா? உமையம்மையும் உடனிருந்து ஆய்வு செய்தாள். அறுமுகச் செவ்வேளும் அமர்ந்து ஆய்வு செய்தான். திருக்கோயில் வளாகத்திற்குள் தமிழ்ச்சங்கம் இருந்தது. தமிழறிஞர்கள் கூடினர். தமிழை ஆய்வு செய்து வளர்த்தனர். புலவர்களுக்கிடையில் புலமைக் காய்ச்சல் வருவதும் உண்டு. சங்ககாலத்திலும் புலவர்களுக்கிடையில் யாருடைய கவிதை சிறந்தது என்றுகலகம்நடந்தது! பெருமான், புலவர்களுக்கிடையேயிருந்த கலகத்தை அடக்கி நக்கீரர், கபிலர், பரணர் ஆகியோர் பாடல்கள் விழுமியவை என்று ஏற்பளித்தார்.

'' ........ கலை வல்லோர் தமிழ் எல்லாம்
சித்தங்கொடு தெருட்டுஞ் சிறுவணிகன் தெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன் தமிழ் பரணன் தமிழ் மூன்றும்
அத்தன்மையன் அறியும் தொறும் அறியும் தொறும் எல்லாம் ''
'' பல்காசொடு கடலிற்படு பவளம் சுடர் தரளம்
எல்லாம் நிறுத்து அளப்பான் என இயல்வாணிகன் குமரன்
சொல்லாழமும் பொருளாழமும் துலைஞாவெனத் தூக்க
நல்லாறு அறி புலவோர்களும் நட்டார்; இகல்விட்டார்''

எனும் திருவிளையாடற் புராணப் பாடலால் இஃதறியலாம். திருக்கோயில் வளாகத்தில் தமிழோடு இசைபாடல் ஓதப்பெற்றது; தமிழாய்வு செய்யப்பெற்றது. ஆக, மானிட இயக்கத்தின் ஊற்றாக இருக்கிற சிந்தனை, கருத்து, இலக்கியம், தத்துவம் ஆகிய அனைத்தும் திருக்கோயில் சூழலிலேயே காணப் பெற்றன; படைக்கப் பெற்றன.

திருக்கோயிலைச் சார்ந்து மொழி உலகம் இருந்தவரையில் தமிழ் மொழி தூய்மையாக இருந்தது; கலப்பின்றி இருந்தது; தனித்து இயங்கியது. தமிழ் மொழி [வழியதாகச் சமுதாயத்தின் சிந்தனைப் போக்கு

அமைந்திருந்த வரையில் உயிர்ப்புள்ளதாக இருந்தது. திருக்கோயிலைத் தமிழ் வளர்த்தது. தமிழைத் திருக்கோயில் வளர்த்தது.

**எல்லா உயிர்க்கும் இறையருள்!**

மனித வாழ்க்கைக்கு விலங்குகள், பறவைகள் துணை செய்யக் கூடியன. ஆதலால், திருக்கோயில் தத்துவத்தில் விலங்குகள், பறவைகள் முதலியனவும் உரியவாறு பாராட்டுப் பெற்றுள்ளன; பேணப் பெற்றுள்ளன! ஏன்? மதுரைத் திருக்கோயில், திருவானைக்காத் திருக்கோயில் முதலியவற்றில் இறைவனை யானைகள் பூசித்துள்ளன. திருவான்மியூர்த் திருக்கோயிலில் பசு பூசித்திருக்கிறது? மற்றும் பிற திருத்தலங்களில் சிலந்தி, குரங்கு, நண்டு ஆகியவைகளும் பூசித்துள்ளன என்ற வரலாறுகள் உண்டு. கரிக்குருவிக்கு மதுரைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆலவாயண்ணல் உபதேசித்தார் என்றெல்லாம் திருக்கோயில் வளாகத்திலிருந்து வெளிவரும் செய்திகளை நோக்கும்பொழுது

"காக்கைக் குருவி எங்கள் சாதி — நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்ற பாரதியின் பாடலுக்கு ஊற்றுக் கண்ணாக அமைந்தது தமிழ் நாட்டின் திருக்கோயில் தத்துவம் என்று எண்ணத் தோன்றுகிறது.

**பரிவின் உறைவிடம்:—**

திருக்கோயில் வளாகத்தில் இறைவன், "பால் நினைந்து ஊட்டும்தாயினும்சாலப்பரிந்து" அருள் செய்யும் காட்சி, மாட்சிமை மிக்குடையது! திருச்சிராப்பள்ளித் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன், பேறு காலத்தில் அல்லற் பட்டிருந்த பெண்ணுக்கு, ஈன்ற தாயாக அருகிலிருந்து மகப்பேற்றுக்குத் துணை செய்தான் என்ற வரலாறு திருக்கோயில் இயற்றிய சமுதாயப் பணிகளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது.

**நிதி:—**

திருக்கோயில் தத்துவத்தில் பொன்னுக்கும் பொருளுக்கும் இடமுண்டு. பொன்னும் பொருளும் வெறுக்கத்தக்கன அல்ல. "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. ஆதலால் வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. திருக்கோயில் மற்றவர்களிடமிருந்து பெறவும் செய்தது. அது போலவே நாடிவந்தாருக்குத் தானும் வழங்கியது. இறைவன், திருவாவடுதுறையில் திருஞானசம்பந்தருக்குப் பொற்கிழி தந்தருளினன்; சுந்தரருக்குச் சித்தவடமடத்தில் பொற்கட்டி தந்தருளினன்; திருவீழி மிழலையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர் நீங்க, திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் பணி செய்ய நாள்தோறும் படிக்காசு தந்தருளினன்.

"காலநிலைமை யால்உங்கள்
கருத்தில் வாட்டமுறீர் எனினும்

ஏல உம்மை வழிபடுவார்க்
களிக்க அளிக்கின்றேம் என்று
கோலம் காண எழுந்தருளிக்
குலவும் பெருமை இருவருக்கும்
ஞாலம் அறியப் படிக்காசு
வைத்தார் மிழலை நாயகனார் ''

என்பது பெரியபுராணம். ஆதலால், திருக்கோயில் சூழலில் வாழ்தல் வளமான வாழ்க்கையாகவே அமைந்திருந்தது.

**மரணத்தை வெல்லல்:-**

வாழ்க்கை, வாழ்வதற்கே! சாவதற்கல்ல! மரணத்தை வென்று வாழ வேண்டும்.

'' கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவற்கு ''

என்ற வள்ளுவம் நோக்குக! திருக்கோயில் தத்துவத்தைச் சார்ந்து திருக்கோயில் கோட்பாட்டின்படி வாழ்கிறவர்கள், மரணத்தையும் வென்று வாழ்வார்கள்! திருக்கடவூர்த் திருக்கோயில் இறைவனைப் பூசித்து வாழ்பவர் மார்க்கண்டேயர். மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு என்பது விதி நிர்ணயித்தது. ஆனால் மார்க்கண்டேயர் தம்முடைய வழிபடும் நாயகனை நம்பிக்கையோடு இறுகப் பற்றிக் கொண்டு தன்னை வெளவவந்த கூற்றுவனிடமிருந்து தப்பித்துவிட்டார். பெருமானும் தமக்கு அன்புபட்ட மார்க்கண்டேயரின் உயிரை வெளவ வந்த காலனைத் தம் காலால் உதைத்து வீழ்த்தினர். '' காலகாலன் '' என்று பெயர் பெற்றான். திருக்கோயில் நாகரிகம் மரணத்தை வென்றது; மரணத்தை வெல்லத் துணை செய்வது என்பதை அறிக.

**வரலாற்று ஏடு:-**

மனித குலத்தின் நிகழ்வு என்பது வரலாற்றை வளர்க்கும் உந்து சக்தி! இன்றைய நிகழ்வு, நாளைய வரலாறு, தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் சுவர்கள் வரலாற்று ஏடுகளாக விளங்கும் மாண்பின! தமிழ் நாட்டில் நிலவிய மொழி, கலை, பண்பாடு, சமூகம், அரசியல், பொருளியல், சமயம் முதலியவற்றின் வரலாற்றுச் செய்திகளைத் திருக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. ஆகத் திருக்கோயில்கள் சென்ற கால வரலாற்றைக் கூறும் ஏடுகளாகவும் எதிர்கால வரலாற்றை இயக்கும் உந்து சக்திகளாகவும் விளங்கி வருகின்றன.

**செய்ய வேண்டுவன:-**

தமிழக வரலாற்றைச் செழுமைப் படுத்திய திருக்கோயில் தத்துவத்தைக் கண்டோம். திருக்கோயில் சமுதாயத்தின் ஆற்றல் மிக்க மையமாக விளங்கியது. '' கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும் '' எனப் பழந்தமிழ்ச் சமுதாய அமைப்பு விளங்கியதை அறிய முடிகிறது. இன்று நமது திருக்கோயில்களுக்கும் நமது

சமுதாயத்திற்கும் நெருக்கமான உறவில்லை. திருக்கோயில் வணிகக் கூடமாக உருமாற்றம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். திருக்கோயில் சமுதாயத்தின் நல்லமைப்புக்கு எதிராக இருக்கிற தீமைகளிலிருந்து மக்களை விடுதலை செய்யவேண்டும். அதாவது சாதிவேற்றுமை, தொழில் வேற்றுமை, தீண்டாமை பாராட்டுதல் முதலிய தீமைகளிலிருந்து மீட்க வேண்டும். திருக்கோயில் ஒரு சுரண்டும் நிறுவனமாக வளர்வது திருக்கோயில் தத்துவத்திற்கே முரணானது! அதனால், நாடு கெடும். பொதுமை நெறிக்கு மாறான ஒரு மேலாதிக்கக் குடி, திருக்கோயிலைச் சார்ந்து தோன்ற அனுமதிக்கக் கூடாது.

திருக்கோயிலைச் சார்ந்தவர்கள் அனைவரும் தொண்டர்கள். திருக்கோயிலைச் சார்ந்து, மீண்டும் திருநெறிய தொண்டு உயிர்ப்புப் பெறுதல் வேண்டும். திருக்கோயிலிலிருந்து வெளியேற்றப்பட்ட ஊராட்சி மன்றங்கள், கல்விச்சாலைகள். மருத்துவச்சாலைகள் மீண்டும் திருக்கோயில் வளாகத்துக்குள் வந்தாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் திருக்கோயிலுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள்!

திருக்கோயிலின் அசையும் சொத்து, அசையாச் சொத்துக்களின் பட்டியல் மட்டும் இருந்து பயன் என்ன? திருக்கோயிலில் நம்மவர் பதிவேடு இருக்க வேண்டும். நம்மவர் வாழ்க்கை நிகழ்வுகளைத் திருக்கோயிலிலேயே செய்யவேண்டும். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் திருக்கோயில் தத்துவம் மேலாண்மை பெற்று விளங்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் திருக்கோயிலுக்குரிய கடமைகளை — அவை எத்தகையவாக இருந்தாலும் தவறாது செய்தல் வேண்டும். ஆண்டுதோறும் ஈட்டிய செல்வத்தில் ஒரு பகுதியினைத் திருக்கோயிலுக்கு உளமார மனமுவந்து செலுத்த வேண்டும். இங்ஙனம் செலுத்துவதன் மூலம் திருக்கோயில் நிதி நிலை சீராகும். இது நடைமுறைக்கு வந்தவுடன் அருச்சனைச் சீட்டு முறைகளை (வணிக முறைகளை) அறவே நீக்க வேண்டும். திருக்கோயில் நிதி சீராகச் செலவழிக்கப் பெற வேண்டும். சிக்கனமாகச் செலவழிக்கப் பெற வேண்டும். திருத்தொண்டின் மூலமே, ஊதியம் பெறாத உழைப்பின் மூலமே திருக்கோயில்கள் தூய்மையுடன் பேணப்படவேண்டும்.

திருக்கோயிலில் ஆரவாரமான செலவுகளைத் தவிர்க்க வேண்டும். திருக்கோயிலில் பொது நிதி ஆதாரத்தை வலிமைப்படுத்தி, வளமாக வாழ வாய்ப்பிழந்தவர்களுக்கு, வாய்ப்பை உருவாக்கி உதவி செய்து அவர்களை உயர்த்த வேண்டும். மீண்டும் திருக்கோயிலை மையமாகக் கொண்ட சமுதாயத்தை அமைப்பது நமக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது!

திருக்கோயில்கள் சமுதாயத்தின் மையங்களாகவும் சமுதாயத்தின் உடைமைகளாகவும் இருக்கவேண்டும். திருக்கோயில்கள் தனியார் உடைமைகளாகவும் மதச்சார்பற்ற அரசாங்கத்தின் உடைமைகளாகவும் இருப்பது விரும்பத்தக்கதல்ல! திருக்கோயில்களை மீண்டும் சமுதாய மையமாக மாற்றுவோம்! நம்முடைய சமுதாய வாழ்வியலைத்

திருக்கோயிலைச் சார்ந்ததாக அமைப்போம்! முன்னையது உடனடியாக நிகழக் கூடியதன்று! தெரிந்த உண்மையே! ஆயினும் பின்னையது — அதாவது சமுதாய வாழ்வியலைத் திருக்கோயிலைச் சார்ந்ததாக அமைப்பது என்ற கோட்பாட்டை உடனடியாகத் தொடங்க யாதொரு தடையுமில்லை! இந்த முயற்சியை உடனடியாக மேற்கொள்வோமானால் நம்முடைய தலைமுறையிலேயே திருக்கோயில்கள் மீண்டும் சமுதாய மையங்களாக விளங்கும் பொற்காலம் தோன்றும்! "கோயிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோயில்" இதுவே நெறிமுறை! செயற்பாடு! தவம்! அனைத்தும் ஆம்!

---

இயம்பினர் ஒருபால்.........!

★ அண்ணாமலைப் பல்கலைக்கழகப் படிப்பும், திருவண்ணாமலை ஆதீன முதல்வர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அரவணைப்பும் புங்குடுதீவில் சைவ சித்தாந்த விருட்ஷத்தை வளர்த்த பரம்பரையின் ஊற்றும் புலவர் ஈழத்துச் சிவானந்தனிடம் திரண்டிருப்பதால் "ஆலயமணி" இனி வருங்காலச் சிவ நெறிக்கும் தமிழ் நெறிக்கும் காவல் மணியாய் ஒலிக்கும்.

சித்தாந்தசரபம். வித்துவான்
க. கணபதிப்பிள்ளை
( மண்டைதீவு அறிமுகவிழாவில் )

★ ஆலயமணியின் சிறப்புப்பிரதிகளை பெண்மணிகளே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அதன் ஆசிரியர் நினைத்தமை பாராட்டுக்குரியதாகும். பெண்மணிகள் தான் சமயக்கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னணியில் நிற்பவர்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் செல்நெறியையும், சொல் நெறியையும் இளந்தலை முறையினருக்குப் புரியவைத்து அருள் நெறியை செழிக்கச் செய்ய எண்ணும் புலவர் ஈழத்துச் சிவானந்தனின் முயற்சிகளும் தொண்டுகளும் சிறக்கப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(நல்லை ஆதினத்தில் நடந்த வெளியீட்டு விழாவில்)

★ தமிழ் உலகுக்குள் நான் நுழையக் காரணமாயிருந்தவர் தமிழ் தந்தை ஆசிரியர், க. சிவராமலிங்கம் அவர்கள். அவருடைய தம்பியாரான புலவர் அவர்கள் குருபரம்பரையில் எனக்குச் சித்தப்பா முறைக்குரியவர். சிறியதந்தையின் முயற்சிகளுக்கு பெருமகனின் ஒத்துழைப்பு என்றும் உண்டு.

செஞ்சொற் கொண்டல் இ. ஜெயராஜ்
( புங்குடுதீவில் நடந்த அறிமுகவிழாவில் )

*சிறுகதை*

# தெய்வீகம்

— சிற்பி —

அது ஒரு பிள்ளையார் கோயில். கேட்டவரம் அருளும் கீர்த்தியுள்ள பிள்ளையார் — சித்தி விநாயகர் கோலாகலமாக வீற்றிருக்கின்றார்.

காலைப் பூசை நடைபெறப் போகிற நேரம்.

குளித்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து, பய பக்தியுடன் அங்கே வந்தான் குமரையன்.

கடந்த இரண்டு நாட்களாக அவனுக்கு ஒரு பெருங்கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

வானம் மூட்டங் கட்டியிருந்தது. கரு மேகங்கள் ஒன்று திரண்டு நெருக்கியடித்துக் கொண்டிருந்தன. "இன்னுஞ் சில மணி நேரத்தில் இறங்கி வருவோம்; நாடுமுழுவதையும் வெள்ளக் காடாக்கி விடுவோம்" என்ற எச்சரிக்கை இடியோசையாக ஒலித்தது.

பல ஆண்டுகளின் பின் இந்த முறைதான் குமரையனுடைய உப்புப் பாத்திகள் நன்கு விளைந்திருந்தன. இன்னும் நாலைந்து நாட்களுக்கு வெய்யில் உக்கிரமாக எறித்தாற் போதும். உப்பைக் கிளறி அள்ளிச் சேகரித்துக் கடைக்காரர்களுக்குக் கொடுத்து விடுவான். இது கால வரை அவன் பட்ட கடன் எல்லாம் தீர்ந்துவிடும்; கையிலும் தாராளமான பணம் மிஞ்சும்; அவனுடைய ஆசைக் கனவுகள் எல்லாம் நிறைவேறும்.

ஆனல், அதற்குள் மழை பெய்துவிட்டால்......?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைத் தடுத்து விடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்; உங்கள் மனம் குளிர உங்களுக்குப் பாலாலும், தேனுலும் பன்னீராலும் அபிஷேகம் செய்விப்பேன்" — அழுது தொழுது கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தான் குமரையன்.

சற்றுநேரத்தில், அங்கே வந்து சேர்ந்தான் முருகையன் அதே பக்திக் கோலத்தில்— குளித்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்துக் கொண்டு பயபக்தியுடன் வந்தான்.

அவனிடமும் ஒரு பெருங் கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

கோர வெய்யிலால் அவனுடைய நெல்வயல்கள் வரண்டு விட்டன. பயிர்கள் வாடிச் சோர்ந்து விட்டன. எப்போதோ பெய்திருக்க வேண்டிய மழை இதுவரை அவனை ஏமாற்றியே விட்டது. இரண்டு மூன்று தடவை வானம் இருண்டுமழைக் கோலம் காட்டியது உண்மை தான்; அவனும் மனம் மகிழ்ந்தது உண்மைதான்; ஆனல் அதெல்லாம் பொய்த்துவிட்டது.

இப்போதாவது மழைபெய்தாற்போதும். அவனுடைய பயிர்கள் செழிக்கும்; நெல்மணியாய்க் கொழிக்கும்; அவனுடைய இருண்ட வாழ்வுக்கு விடிவு ஏற்படும்.

ஆனல், இம்முறையும் மழை பொய்த்துவிட்டால்...?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைக் கொடுத்

துவிடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள். உங்களுக்குப் பாலாலும் தேனுலும் பன்னீராலும் அபிஷேகச் செய்விப்பேன்''— அழுது தொழுது கெஞ்சி மன்றுடிக் கொண்டிருந்தான் முருகையன்.

உள்ளே மூலஸ்தான விக்கிரகத்துக்குத் தீபாராதனை நடைபெறுக் கொண்டிருந்தது. சர்வாலங்கார மூர்த்தியின் அழகு கண்களைப் பறிக்க, இருவரும் மானசீகமாகத் தத்தம் வேண்டுதல்களைச் சமர்ப்பித்துக் கொண்டும், நேர்த்திக்கடனை நினைவூட்டிக் கொண்டும் பயபக்தியுடன் நின்றனர்.

பூசை முடிந்து, பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு கோவிலைவிட்டு வெளியேறமுன், மீண்டும் ஒரு தடவை விநாயகரைப் பார்த்தனர்.

ஆழக்கடலின் அமைதியுடன் அனைத்தையும் அறிந்து கொண்டுள்ள நிறைவுடன், அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் ஆடாமல் அசையாமல், அழகொழுக வீற்றிருந்தார் ஆனைமுகன்.

இருவரும் கோயிலிலிருந்து புறப்பட்டனர்; வானத்தைப் பார்த்தனர்.

வானம் சற்று வெளித்தாற்போல் காட்சியளித்தது.

முருகையனை ஒரு வெற்றிப் பார்வை பார்த்தான் குமரையன். சிந்தனையில் ஆழ்ந்தபடி தலையைக் குனிந்து கொண்டான் முருகையன்.

தொடர்ந்து அவர்கள் நடந்துகொண்டிருந்தனர்; அடிக்கடி வானத்தைப் பார்த்தனர்; தம் குலதெய்வமான அந்தச் சித்திவிநாயகரை மானசீகமாக வேண்டிக்கொண்டிருந்தனர்.

❋

ஊரின் ஒருகோடியில் குமரையனின உப்புப்பாத்திகளும், மறுகோடியில் முருகையனின் நெல்வயல்களும் இருந்தபோதிலும் இருவரின் வீடுகளும் ஊரின் நடுமத்தியில், அருகருகே இருந்தன. இருவரும் எதிரிகள் அல்லர் என்றாலும், அவர்களை நண்பர்கள் என்றும் சொல்ல முடியாது. அவர்கள் ஈடுபட்டிருந்த தொழில்களின் தன்மையால், இருவரிடமும் ஒருவித வேற்றுமையுணர்வு காணப்பட்டது என்பதுதான் சரி.

## வீடு கிட்டிவிட்டது

குமரையன் நடையில் ஒரு மிடுக்கு; வேகம். முருகையனின் நடையில் ஒரு சோர்வு; தயக்கம்

தத்தம் வீடுகளுக்குள் நுழைவதற்குமுன் மீண்டும் ஒரு தடவை வானத்தை அண்ணாந்து பார்த்தனர்.

வானம் மீண்டும் இருண்டுவிட்டது. கலைந்திருந்த கருமேகங்கள் ஒன்று சேர்ந்து விட்டன. இப்பொழுது இடியில்லை; மின்னலில்லை. ஆனால் வானத்திற் பொத்தல் ஏற்பட்டதைப்போல், மழை சோனாவாரியாகப் பொழியத் தொடங்கி விட்டது.

திகைத்துவிட்டனர் இருவரும். திடீரென்று எப்படி ஏற்பட்டது இந்தமாற்றம்?

ஊழிப் பெரு வெள்ளம் வந்து விடுமோ என்று பயப்படு மளவுக்கு அன்றைய பகற்போது முழுவதும் ஓயாமற் கொட்டிக் கொண்டிருந்த மழை, நன்கு இருட்டியதுதான் ஓய்ந்தது.

குமரையனிடமிருந்த நம் பிக்கையெல்லாம் போய்; ஏமாற் றமும் விரக்தியும் எரிச்சலுமே மிஞ்சின.

இத்தனை காலமும் அந்தச் சித்தி விநாயகரை வழிபட்டுத் தான் என்ன பயன்? ஏன், அன்று காலையிறகூட அதே விநாயகரை அவன் மனமுருகி, மெய்யுருகி வேண்டவில்லையா?

கடவுளா அவர்?

இல்லை கல், வெறுங்கல்.

கண்ணே கருணையோ அற்ற அந்தக் கருங்கல்லை நெஞ்சார, நாவாரத் திட்டிக்கொண்டிருந் தான் முருகையன்.

முருகையனின் ஏக்கம் நீங் கியபாடில்லை. மழை வேண்டும் என்று தவங்கிடந்ததும், விநாய கரை வேண்டியதும் உண்மை தான். அளவாக மழைபெய் தாற்றான் அவனுக்கு நன்மை. அதிகப்படி பெய்தால் பயிர் அழுகி நாசமாகிவிடும். மழை இருட்டான படியால் வயற்பக் கஞ் சென்று பார்த்து வரவும் முடியவில்லை. கலையாத கவலையு டன் வீட்டிற்குள்ளேயே குடங் கிக் கொண்டு கிடந்தான்.

விடிந்தது. வானமும் நன்கு வெளித்துவிட்டது.

உப்புப் பாத்திகளை எட்டி யும் பார்க்கவில்லை குமரையன். போய்ப் பார்த்தாற்றான் நிலைமை தெரியுமா?

முருகையன் வயற் பக்கம் ஓட்டோடியும் சென்றான். நல்ல காலம் வாடிக்கிடந்த பயிரெல் லாம் இப்போது செழித்துச் சிலிர்த்துத் தலையை நிமிர்த்தி நின்றன. சற்று மேட்டுப்பாங் கான அவனுடைய வயலில் அளவான நீர்தான் நின்றது. அவ்வளவும்போதும். இம்முறை அவனுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.

குமரையனின் நெஞ்சு புகைந்து கொண்டிருக்க, முரு கையன் தினமும் வயற்பக்கம் சென்று வந்தான். நெற்பயிர்கள் பொத்தி தள்ளியதை, வெள்ளம் சிறிது சிறிதாக வற்ற நெல் மணிகள் மெல்ல மெல்ல முற் றிக் கொண்டு வருவதைப் பெரு மையுடனும் நிறைவுடனும் அவ தானித்துக் கொண்டுவந்தான் அவன்.

ஆயிற்று. அறுவடையும் முடிந்து விட்டது. முருகையன் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்கு அதிக விளைச்சல் கிடைத்தது. வேண்டிக்கொண்ட படி விநாயகர் மனம் குளிர அபி ஷேகம் செய்வித்தான்; ஏழை களுக்கு அன்னதானமும் செய் தான்.

அடுத்த விதைப்புக்கும், ஆண்டு முழுவதும் தன் குடும் பத்துக்குப் போதுமான நெல்லை வைத்துக் கொண்டு மிகுதியை விற்று விடுவது அவன் வழக்கம் ஆனால் இந்த முறை மேலதிக மாகவும் சில நெல் மூடைகளை அவன் வைத்திருந்தான்.

❋

நாளிதழ் உதிர்ந்தது. மாதங்

கள் கருகின. ஆண்டொன்று வரண்டு உருண்டது.

அடுத்த விதைப்புக்காலமும் வந்துவிட்டது. ஆனால் வானம் வெளிறிக் கிடந்தது. மழையைக் காணவில்லை. எங்கும் வரட்சி; ஒரே வரட்சி. புல் பூண்டுகள் கருகிச் செத்தன. அகோர வெய்யிலில் மனிதர் புழுவாகத் துடித்தனர்.

முருகையனுல் வயலுக்குள் இறங்கவே முடியவில்லை. நிலமெல்லாம் இறுகி வைரம்பாய்ந்து கிடந்தது.

இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் இதே வரட்சி நிலைதான் என்று பேசிக் கொள்ளப்பட்டது.

பசி — பட்டினி — பஞ்சம் — பற்ருக்குறை — மரணம் — இவை பற்றிய பயங்கர நினைவுகள் மக்களை வாட்டி வறுத்தெடுத்தன.

ஆனல் குமரையன் மட்டும் குதூகலமாக இருந்தான். அவனுடைய உப்புப் பாத்திகள் பூத்துக் கிடந்தன. இத்தனை வருட வாழ்க்கையில் இப்படியொரு செழிப்பான விளைச்சலைக் காணவேயில்லை. அவை வெறும் உப்புப் பாத்திகள் அல்ல; உப்பு மலைகள்; பணக் குவியல்கள்.

ஊர் முழுவதும் பஞ்சத்தில் வாடிக், கண்ணீரில் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனல் அதைப் பற்றி விசாரிக்கவோ கவலைப்படவோ குமரையனுக்கு நேரமில்லை. உப்பு மலைகளை உடைப்பதிலும் மூட்டைகளாகக் கட்டி வீட்டிற்குள் பத்திரமாக வைப்பதிலும் அவனுடைய பொழுது போய்க் கொண்டிருந்தது;

எந்தச் சக்தியாலும்—எந்தக் கடவுளாலும், அவன் இலட்சாதிபதியாவதை இனித் தடுக்கமுடியாது; தடுக்கவே முடியாது.

அவனுடைய பிரச்சினைகள் எல்லாம் இனித் தீர்ந்துவிடும்; பஞ்சம் அவனைக் கண்டு பறந்தோடிவிடும்; நீண்ட காலமாக அவன் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தபடி ஒரு காரும் அவனுக்குச் சொந்தமாகிவிடும்; அவன் யாருக்குமே பணியாமல் தலை நிமிர்ந்து செல்லலாம்.........

நாட்கள் சுழன்றன. ஆனல் குமரையன் எதிர்பார்த்தபடிஎதுவுமே நடக்கவில்லை. உப்புமூட்டைகள் அப்படி அப்படியே கிடந்தன. ஒரு நேரக் கஞ்சிக்கே மக்கள் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கும்போது இவ்வளவு பெருந்தொகையான உப்பைக் கொள்வனவு செய்ய யார் வரப்போகிருர்கள்?

நாளாக நாளாக அவனுடைய நம்பிக்கைக் கோட்டைகள் தகர்ந்து கொண்டே வந்தன; ஆசைக் கனவுகள் சிதறிக்கொண்டே வந்தன.

அரைவயிற்றுக்கும் கால்வயிற்றுக்கும் சாப்பிட்டுங்கூட அவன் வைத்திருந்த அரிசி விரைவில் தீர்ந்துவிட்டது. அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்வதென்றே தெரியாத ஏக்கநிலை. இரண்டொரு தடவை பச்சைத் தண்ணீர் மட்டும் வயிற்றை நிறைத்தது.

ஊரிலுள்ள பலர் முருகையனைத் தேடி வந்தனர். தேவையும் தகுதியும் அறிந்து, சிலருக்குக் கடனுகவும் சிலருக்குத் தான

மாகவும் நெல் கொடுத்தான் முருகையன்.

ஆனால் முருகையனிடம் உதவிபெறுவதற்குக் குமரையனின் தன்மானம் விடவில்லை. அதுமட்டுமல்ல, தான் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை என்பதையும் அடிக்கடி வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான் அவன்.

பிள்ளையார் கோயில் மணி கேட்கும்போதெல்லாம் அவனுடைய ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பும். தானும் தன் குடும்பமும் இங்கே பட்டினியால் செத்துக்கொண்டிருக்க அந்தக் கருங்கல்லின்மேல் பாலையும் தேனையும் ஊற்றி வீணுக்குகிறார்களே!

இந்த நிலையில், மழை பெய்ய வேண்டும் என்பதற்காக அந்த விநாயகருக்கு விசேட அபிஷேகமும் பொங்கலும் நடைபெறப் போவதை அறிந்தபோது அவன் எரிமலையானான். அன்னதானத்துக்குத் தேவையான உப்பை அவனிடம் நன்கொடையாக வாங்க வந்தவர்களை வாய்கொண்ட மட்டும் திட்டித் தீர்த்தான்,

''உந்தக் கல்லுக்கு மேலே தண்ணியை ஊத்தினப்போலை மழை வந்துவிடுமோ? இந்த இருபதாம் நூற்றாண்டிலை இப்படி ஒரு மோட்டுத்தனமான வேலையைச் செய்யிறதைக் கேள்விப்பட்டால் மற்ற நாட்டுக்காரர்கள் எங்களைப்பற்றி என்ன நினைப்பினம்?''

''அவை நினைக்கிறதைப்பற்றி நாங்கள் ஏன் கவலைப்படவேணும்? நாங்கள் எல்லாரும் ஒரே மனதாகக் கடவுளை வேண்டினல் அவர் நிச்சயம் கண்திறப்பார். முந்தி இரண்டு மூன்று தடவை கொடிய வரட்சி வந்தபோது இப்படித்தானே நாங்கள் செய்தம்? மழை பெய்ததுதானே...?''

சரி, சரி எதையாவது போய்ச் செய்து துலையுங்கோ... ஆனால் என்னட்டை மட்டும் எந்தவிதமான உதவிக்கும் வரவேண்டாம். எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை.''

''ஊரிலையுள்ள எல்லாரும் ஒரு மனதாக ஒத்துச் செய்யிற காரியம் இது, நீ மட்டும் இப்பிடி எதிர்த்து நிக்கிறது அவ்வளவு நல்லாயில்லை அண்ணை'' என்று சொல்லிக்கொண்டு. போதியளவு உப்பைத் தாமாகவே எடுத்துக் கொணடு விரைந்தார்கள் தண்டல்காரர்கள்.

குமரையனால் பொறுக்க முடியவில்லை. அவனுடைய உப்பு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. ஒரு சதமேனும் வராவிட்டாலும் அவன் கவலைப்படப் போவதில்லை. ஆனால் ஒரு சிறிய உப்புக்கட்டியென்றாலும் அந்தக் கோவிற் காரியத்திற்குப் பயன்படக் கூடாது. அதை அவன் தடுத்தே ஆகவேண்டும்,

தான் கோயிலுக்குச் செல்லப் போவதைச் சொல்வதற்காக மனைவியை அழைத்தபோதுதான் வேறொரு உண்மை அவனுக்குத் தெரியவந்தது. அவனுடைய மனைவியோ மக்களோ அப்போது அங்கில்லை.

அவர்களும் கோயிலுக்குத் தான் சென்று விட்டார்களோ?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப் போலிருந்தது அவனுக்கு.

அவன் புறப்பட்டான். வெறுப்பு, வேதனை, ஆத்திரம், அவமானம், ஏக்கம், ஏமாற்றம்—எல்லாம் கலந்த ஓர் உருவமாக வீரேடும் வெறியோடும் புறப்பட்டுவிட்டான்.

மனத்தின் ஆவேசத்துக்கு ஈடுகொடுக்க அவனுடைய கால்களால் முடியவில்லை. இரண்டு நாட் பட்டினி வேறு, அவனைத் தள்ளாடித் தடுமாறச் செய்தது. என்ருலும் ஒருவித வைராக்கியத்துடன் அவன் கோவிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

❋

கோவிலை அவன் அடைந்த போது, ஊர் முழுவதும் அங்கே திரண்டு நிற்பது தெரிந்தது. அனைவருமே அந்த விநாயகரை நோக்கிக் கை கூப்பியபடி நின்றனர். பலருடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது.

'கஷ்டப் படுபவர்களுக்குக் கண்ணீரைக் கொடுக்கத்தான் இந்தக் கல்லால் முடியும். வயல்களில் மழையைப் பெய்விக்க முடியுமா?

ஒருவித ஏளனப் பார்வையுடன் அந்த மனிதக் கும்பலை நோக்கினுன். முன் வரிசையில் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் பயபக்தியுடன் நின்றனர். மனைவியின் கைகளில் ஏன் ஒரு பாத்திரம்? கோயிற் பிரசாதத்துக்காகவா?

பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு அத்தனை பேருக்கும் மத்தியில் வைத்து அவளுக்கு அடித்தாற்ருன் அவனுடைய ஆத்திரம் தீரும் போலிருந்தது.

சிறிதும் தாமதியாமல் அவள் மேற் பாய்ந்தான், உரத்த குரலில் எதையோ கர்ச்சித்தபடி கையை ஓங்கியவன் அடுத்த கணமே சுருண்டு விழுந்தான்......

"குமரையனைத் தூக்குங்கள்... முகத்திலே தண்ணீர் தெளியுங்கள் காற்றுப்படும்படி நன்ருக விசுறுங்கள் ....." என்ற குரல்கள் எழுந்தது அவனுக்குக் கேட்கவில்லை. அனைவருமே அவனுக்காகப் பரிதாபப்பட்டதும், பரபரப்படைந்ததும், ஒவ்வொருவரும் அவனுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று துடிதுடித்ததும் அவனுக்குத் தெரியாது.

❋

நீண்ட நேரத்தின்பின் மயக்கம் நீங்கிச் சிறிது சிறிதாக உணர்வு திரும்பியபொழுது, தன் மனைவியின் மடியிற் தான் படுத்திருப்பதையும், கோயிற் பிரசாதத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக முருகையன் ஊட்டிக்கொண்டிருப்பதையும் அவன் உணர்ந்தான்.

"முருகையாண்ணை, இன்டைக்குக் குமரையாண்ணையின்ரை உப்பு மட்டும் வந்திராவிட்டால், உங்களின்ரை அரிசியாலும் அவ்வளவு பிரயோசனம் இருந்திருக்காது" என்று யாரோ சொல்லிக்கொண்டிருந்தது குமரையனுக்குத் தெளிவாகவே கேட்டது.

'மின்' வெட்டினுற் போலிருந்தது அவனுக்கு:

போன தடவை அவனுடைய வயிற்றெரிச்சலைக்கிளறிக் கொண்டு பெய்த மழையில் விளைந்த அரிசி தானு இன்று அவனுக்கு உயிரளித்துக் கொண்டிருக்கின்ற

து? அதே அரிசியுடன் தானா அவனுடைய உப்பும் இரண்டறக் கலந்திருக்கிறது?

விக்னேஸ்வரா......விநாயகா......"

பேருண்மை ஒன்றைப் புரிந்து கொண்ட பேரானந்தத்தில் குமரையனுடைய வாய் அவனை அறியாமலே கூவியது,

"அரோகரா பிள்ளையாருக்கரோகரா......"

கூடிநின்ற மக்களும் கூவினர்; கூத்தாடிக் கும்பிட்டனர்.

வெளியே மழைத்துளிகள் சடசடத்தன.

கடவுள் கண்திறந்துவிட்டார் என்ற நம்பிக்கையில் விநாயகரை நோக்கி அனைவருமே கைகூப்பினர்.

ஆனால் விநாயகர் மட்டும் ஆழக்கடலின் அமைதியுடன், அனைத்தையும் அறிந்து கொண்டுள்ள நிறைவுடன் அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் அழகொழுக ஆங்கே வீற்றிருந்தார்.


" போதொடுநீர் சுமந்தேத்தி புகுவார் அவர் பின் புகுவேன் " என்னும் பண்பாட்டை

வளர்க்கும்

ஆலய மணிக்கு

எமது

வாழ்த்துக்கள்

P. T. K. Ratnam & Company

Importers & General Merchants

No 37, Dam street

COLOMBO-12

# நிறை மனிதனாக வாழ வழி வகுக்கும் இந்து சமயக் கிரியைகளும் சடங்குகளும்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்.

சமய வாழ்க்கை கிரியைகளையும் சடங்குகளையும் தொடக்கமாகவுடையது. சிறுபிராயம் முதல் இல்லத்திலோ அன்றி ஆலயத்திலோ நடைபெறும் கிரியைகளை நாம் காணும்போது சமயம் பற்றிய சிந்தனைகள் எமது உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. ஆன்மிக வாழ்வுக்குரிய ஆரம்பப் படிகளாக அமைவனவே கிரியைகளும் சடங்குகளும் எனில் மிகையில்லை. இதனால் கிரியைகளின்றிச் சமயம் முக்கியத்துவம் இழந்து விடுவதும் தவிர்க்கமுடியாததாகின்றது. இக் காரணத்தினால்தான் கிரியைகள் நிகழும் இடமாகிய ஆலயம் இந்துக்களது சமய வாழ்க்கையில்

> இந்து நாகரிகத்துறை உயர்கல்வி மாணவர்களுக்கு உதவும் வகையில்; இத்துறை சார்ந்த அறிஞர்களில் ஒருவராகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆலயமணிக்கென்று எழுதிய ஆய்வுக் கட்டுரை இது.
>
> — ஆர்.

உயரிடம் வகிக்கின்றது.

முதனூல் என்றும் இறைவன் நூல் என்றும் சிறப்பிக்கப்படும் வேதங்களும் ஆகமங்களும் மற்றும் பிராம்மணங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்றவைகளும் கிரியை மரபை அறிந்து கொள்வதற்குரிய பிரமாண நூல்கள் ஆகும். தமது காலத்துக்கேற்ற கிரியை மரபுகளை இந் நூல்கள் எடுத்துக் கூறுமிடத்தும் சமய வாழ்க்கையில் கிரியை மரபு இன்றியமையாதவாறு இழையோடி நிற்பதை இந்நூல்கள் உணர்த்துகின்றன. எனவே கிரியைகளின் நோக்கங்களையும் அவற்றின் வரம்பையும் நாமறிவது அவசியமாகின்றது.

மதச் சின்னம் என்ற நிலையில் கிரியைகளும் சடங்குகளும் அவற்றுக்குரிய தொடக்கத்தைக் கொண்டுள்ளன. இவை நம்பிக்கையின் சின்னமாகவே நடைமுறையில் உள்ளன; எனவே சமயச் சடங்குகள் எமது கட்புலனுக்கு அப்பாற்பட்டதொரு உலகம் பற்றிய நம்பிக்கையின் கண்டுணரக்கூடிய குறியீடுகளாக

அமைந்துவிடுகின்றன. எனவே கிரியைகள் சமய நம்பிக்கைகளைப் பாதுகாத்தும் பேணியும் வருகின்றன. பல்வேறு தலைமுறைகளைச் சார்ந்த மக்களை ஒன்றிணைக்கும் சாதனமாகவும் 'சமகாலத்தில் வாழும் மக்களுக்கு அம்மரபினை உணர்த்தும் சாதனமாகவும் அவை விளங்குவன. சில கிரியைகள் நினைவுக்கெட்டாத காலங்களை மீண்டும் நினைவுகூர்வதற்குத் துணைபுரியும் காரணத்தால் அவை பயபக்தியுடன் கடைப்பிடிக்கப் படுகின்றன. உதாரணமாக அக்கினி வழிபாடு வேதகாலத்தை நினைவுக்குக் கொண்டுவரும். ஏனெனில் அக்காலத்தின் பிரதான வழிபாடாக இதுவே விளங்கியது. இவ்வாறாக கிரியைகளின் வரலாற்று முக்கியத்துவத்தை நாம் உணரலாம்.

கிரியைகளும் சடங்குகளும் கடந்தகாலத் தலைமுறைகளை இணைப்பதோடன்றி, பல்வேறு இடங்களில் வாழும் சமகாலத் தலைமுறையினரையும் நன்கு இணைத்துவிடுகின்றன. அவர்கள் எங்கிருப்பினும் சமய ரீதியிலான சமூகத்தில் மக்களது ஒற்றுமையை அவை நினைவுறுத்துவனவாக உள்ளன. பல்வேறு இடங்களில் பரந்துவாழும் மக்கள் தாம் எந்நிலையைச் சார்ந்தோராக இருப்பினும் தமது வேறுபாடுகளை மறந்து கிரியைகளை உள்ளிட்ட பண்டிகையையோ விழாவையோ கொண்டாடும்போது, தாம் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள் என்பதை உணரத் தவறுவதில்லை. இது கிரியை மரபினால் ஏற்படும் சமூக நன்மையாகும்.

கிரியைகளினால் சமூகத்தில் ஏற்படும் இத்தகைய நன்மைகளை விட தனிமனிதனைப் பொறுத்த வரையிலும் அவற்றின் நன்மைகள் குறிப்பிடத்தக்கனவாகும். ஆழ்ந்த சிரத்தையோடும் நம்பிக்கையோடும் கிரியைகளில் ஈடுபடுவோரது உள்ளங்கள் இவற்றால் பக்குவமடைகின்றன. சமய உணர்வு அவர்களது உள்ளங்களில் பெருகுகின்றது. சமய உணர்வின் பாற்பட்ட நிலையில் அதற்கென ஏதாவதொரு கிரியையொன்றினை நிறைவேற்றும்வரை ஒருவனுக்கு மனநிறைவு ஏற்படாது. உதாரணமாக ஆலயம் சென்று அங்கு இடம் பெறும் கிரியைகளில் பங்கு பற்றியபின் அவனது உள்ளம் ஏதோவொரு வகையில் திருப்தியடைகின்றது. அங்கு நிகழும் கிரியைகளின் தாற்பரியங்கள் முழுமையாக விளங்காது விடினும் ஆலய வழிபாட்டினால் அவனுக்கு பக்தியுணர்வு மேலோங்கி திருப்தி கிட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று தனது தந்தையை இழந்த ஒருவன் துயர மிகுதியால், செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து முடிக்கும் பொழுது தந்தைக்குரிய இறுதிக் கடன்களைச் செய்த திருப்தி அவன் மனதில் ஏற்படுவதோடு அவனது உள்ளத்தில் ஏற்பட்ட சோகமும் படிப்படியாகக் குறைந்துபோகின்றது. கிரியைகளினால் சமய வாழ்வில் ஏற்படும் உளரீதியான நன்மைகளில் இதுவுமொன்றாகும்.

இத்தகைய உளரீதியான நன்மைகளோடு நெருங்கிய தொடர்புடையது கிரியைகளினால் ஏற்படும் அழகியல் உணர்வாகும். கிரியைகளினால் சமய உணர்வு மேலோங்கும் அதே சமயம் அழகியல் உணர்வும் வளர்ச்சியடைகின்றது. இவ்வகையிலேயே இந்துக்கலைகள் சமயத்தை நிலைக்களனாகக் கொண்டு வளர்ச்சி பெற்றதை நாம் உணர முடிகின்றது. இந்த அழகியல் உணர்வே

உயர்ந்த கோபுரங்கள் விமானங்கள், உள்ளத்தைக் கவரும் அழகிய சிற்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆலயங்களை எழுப்பி வழிபாடியற்ற காரணமாக அமைந்தது. அத்துடன் ஆலயத்தில் வருடந்தோறும் மாதந்தோறும் இடம் பெறும் நைமித்திகக் கிரியைகளிலும் இந்த அழகியல் உணர்வே இழையோடுகின்றது. உதாரணமாக நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மகோற்சவ தினங்களில் கந்தன் பல்வேறு நிலைகளில் அலங்கார மூர்த்தியாகப் பவனிவருதலும் பிரமோற்சவமாகிய தேர்த்திருவிழாவின்போது ஷண்முகர் அலங்காரக் கந்தனாகத் தேரில் பவனிவருவதும் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்துவதோடு அழகியல் உணர்வையும் மேலோங்கச் செய்துவிடுகின்றது. இத்தகைய சமய விழாக்களில் சமய உணர்வும் கலைஉணர்வும் ஒன்றுடன் ஒன்று இணைந்து அழகியல் உணர்வை வளர்க்கத் துணைபுரிகின்றன.

கிரியைகளினால் ஒருவனுக்குக் கிடைக்கும் இத்தகைய நன்மைகளுக்கும் மேலாக வேறுசில உயர்ந்த அனுபவங்களும் கிடைக்கின்றன. கிரியைகள் ஒழுக்க நெறியோடும் தொடர்புடையன. ஒவ்வொரு கிரியையும் மனிதனது ஒழுக்கத்தை நெறிப்படுத்துவனவாகவே உள்ளது. கிரியைகளினால் ஒருவனது அகமும் புறமும் தூய்மையடைகின்றன. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் தூய்மையடைகின்றன. கிரியைகளிற் பங்குகொள்ள விழையும் ஒருவன் நீராடித் தூய ஆடையணிந்து சிவசின்னங்களைத் தரித்து விரதமிருந்து தன்னடக்கத்துடன் திகழ்வான். கிராமமொன்றிலே உள்ள ஆலயமொன்றில் கொடியேறிவிட்டால் அந்தக் கிராமம் முழுவதுமே தெய்வீகப் பொலிவுபெற்று விளங்குவதோடு மக்களும் தூய்மையடைகின்றனர். புதுவருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி போன்ற விசேட தினங்களிலும் பிதிரரின் சிராத்த தினங்களிலும் நாம் வாழுமிடங்கள் கூட சுத்தமாக்கப்பட்டு, புனிதமடைகின்றன. குறிப்பாக வருடப்பிறப்புக்கு முன்னோடியாக இல்லங்களை நன்கு கழுவி சுத்தஞ் செய்வதும் சூழவுள்ள பகுதிகளைச் சுத்தஞ் செய்வதும் முக்கிய கடமையாக அமைகின்றது. இதனால் வீட்டுப்புறச் சூழல் தூய்மையடைகின்றது. சமயத்தின் உயர்ந்த இலட்சியம் ஆன்மீக விடுதலையாகும். அத்தகையதொரு நீண்ட பயணத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் ஒழுக்க நெறிகளை வகுத்துத் தருவதில் கிரியைகள் முதற்படியாக அமைகின்றன.

இத்தகைய நன்மைகளுக்கு மகுடம் வைத்தாற்போல் அமைவது கிரியைகளினால் பெறப்படும் உயர் அனுபவமாகிய அனுபூதியாகும். இதுவே சமய அனுபவத்தின் உச்சநிலை. கிரியைகளின் உள்ளார்ந்த மறைபொருளும் இதுவேயாகும், நன்கு வளர்ச்சி பெற்ற ஒரு சமயத்தின் கேந்திரமாக அமைவது இந்த அனுபூதியாகும். இதனால் ஒருவனது உள்ளம் இறைவனுக்கு அண்மையிற் சென்றுவிட்ட அனுபவத்தைப் பெறுகின்றது. கிரியைகள் ஒருவனுக்கு இத்தகைய அனுபவம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலையை வகுத்துத் தருகின்றன. கிரியைகளின்போது இடம்பெறும் மந்திர உச்சாடனங்கள், அங்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு மரபுவழி நடைமுறைகள் இந்த அனுபவத்திற்கு வழிவகுப்பன. ஒருவன் ஆலயத்தில் வழிபடும்போது

பொறுப்பதிகாரி
ஊர்காவற்றுறை பிரதேச
அனலைதீவு உப அலுவலகம்.

தன்னளவில் ஈடுபடும் ஜபம், தியானம், பாராயணம் போன் றவை இவ்வகையிற் குறிப்பிடத் தக்கன. உலகியற் தொடர்புகளி லிருந்து ஒருவன் தன்னைப் படிப் படியாக விடுவித்து, ஒரு சில கணமேனும் தனது உள்ளத்தில் 'இறைவன் உளன்' என்ற உண் மையை உணர இவை வழி வகுப்பன. பாரெங்கணும் நிறை ந்து பரந்து விளங்கும் பரமனை நாம் ஆலயத்திற் சென்று வழி பாடு செய்வதற்கு கிரியைகளே எமக்குப் பெருந்துணை புரிவன. இவை இறைவனையும் எம்மையும் தொடர்புபடுத்தும் சாதனமாகிய பக்தியுணர்வை ஏற்படுத்தித் தரு வன. எனவே கிரியைகளின் பிறி தோர் உன்னத நோக்கம் பக் தியை மேம்படுத்தலாகும்.

கிரியைகள் தம்மளவிலே சில வரம்புகளைக் கொண்டு விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. கிரியைகள் நம்பிக்கையின் சின் னமாகவே எமது சமயத்திற் கைக்கொள்ளப் படுவதால் இவை இரண்டுக்குமிடையே நீண்ட இடைவெளி இல்லாதி ருத்தல் வேண்டும். ஒரு காலத் தில் நிலவிய நம்பிக்கையின் சின் னமாக கைகொள்ளப்பட்ட கிரி யைகள் பிறிதோர் காலத்திற் குப் பொருத்தமற்றதாக அமை யலாம். காலஞ் செல்லச் செல்ல அத்தகைய நம்பிக்கைகள் வளர்ச் சியடைந்து புதிய நோக்கங்களைக் கொண்டு விளங்குகின்றன. எனவே கிரியைகளிற் பெரும் பாலானவற்றை அவ்வக் காலத் தின் தேவைக்கேற்ப மாற்றிய மைக்கும் தேவை ஏற்படலா யிற்று. இப்பணியை காலத்துக் குக் காலம் ஸ்மிருதிகள் மேற் கொண்டமையும் குறிப்பிடத் தக்கது. இக்காரணத்தினல் இந்து சமூகத்தை மேம்படுத்தும் சமூக நூல்களாக இவை முக்கியத்து வம் பெறலாயின. உதாரண மாக வேதங்கள் கூறும் கிரியை மரபுகளும் ஆகமங்கள் கூறும் கிரியை மரபுகளும் தம்முள் வேறுபடினும் சில அடிப்படை ஒற்றுமைகளை நாம் அவற்றி டையே அவதானிக்கலாம். அதே சமயம் புதிய சமய சிந்தனைக ளின் வளர்ச்சியை நாம் இதிகாச புராணங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. கீதை இவையனைத் தையும் உள்ளடக்கிய சிறந்த வாழ்க்கை நெறியைத் தருகின் றது. இவ்வாறு கிரியை யற் றிய நம்பிக்கைகள் காலத்திற் குக் காலம் வளர்ச்சியடைந்து வந்துள்ளவிடத்தும் இந்துக்களைப் பொறுத்தமட்டில் அவை குறித்து நிற்கும் இறுதி இலட்சியமாகிய ஆன்ம விடுதலை பற்றிய நம்பிக் கையில் எத்தகைய மாற்றமும் இல்லை என்பதை நாம் கவனித் தல் வேண்டும்.

ஒருவன் கிரியைகளின் உட் பொருளை உணராது அவற்றில் ஈடுபடுவதால் அவை வெறும் இலட்சியமற்ற செயல்களாகவே அமைந்து விடுகின்றன. மீண்டும் மீண்டும் செய்ததொன்றையே விளக்கமின்றிச் செய்வதால் அதில் ஒருவனுக்குச் சலிப்பு ஏற் படுவதும், தவிர்க்கமுடியாத தாகும். ஆகவே கிரியைகளில் ஈடுபடுவோர் தாம் செய்யும் கிரியைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுதல் அவசியமாகின்றது. கிரியைகளில் ஈடுபடும் பக்தனும் அவற்றை வழிநடத்தும் சமய குருமாரும் இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியவர்களாயுள் ளனர். சமய குருமார் ஆலயத் திலோ அன்றி இல்லத்திலோ இடம் பெறும் கிரியைகளின் முழு விளக்கத்தையும் நடைமுறைகளை

யும் நோக்கங்களையும் நன்கு அறிந்தவராக இருத்தல் அவசிய மாகின்றது. இதனை எட்டுவதற் குக் கூடிய அளவிலான அனுபவ அறிவு அவசியமாகின்றது. இவ் வகையில் சமய குருமார் குருகுல வாயிலாகவும் ஏனைய வழிகளிலும் கிரியைகள் பற்றிய முறையான பயிற்சி பெறுதல் அவசியமாகின் றது. பண்டைய காலத்தில் இத் தகைய பயிற்சிகள் குருகுலவாசத் தின்மூலமும் தந்தை மைந்தனுக்கு அறிவுறுத்துவதன் மூலமும் வழங் கப்பட்டு வந்தன. கிரியைகளில் ஈடுபடுவோரும் அதனை நடத்து பவர்களும் அவைபற்றிய சிறந்த விளக்கத்தைப் பெறுது விடின் அவை எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படுகின்றனவோ அந்த நோக்கத்தை அடைய முடி யாது போய்விட இடமுண்டு. இதனை எடுத்துக் கூறும் ஆற்றல் சமய ஞானிகளுக்கும் சமயகுரு மாருக்குமே உண்டு. இக்கார ணத்தினுல் தான் சமயப் பெரி யார்களும் சமய குருமாரும் சம யத்தின் பாற்பட்ட ஒரு சமூகத் தின் உயிரும் உடலும் எனப் போற்றப்படுகின்றனர். இவ்வ கையில் நாவலர் பெருமானின் தொண்டினை நினைவு கூர்தல் பொருத்தமுடையது. நாவலர் பெருமான் தனது காலத்தில் ஆல யத்தோடு தொடர்புடையோர் தாம் சார்ந்த சமயத்தின் தாற் பரியங்களை நன்கு விளங்கியவர் களாகத் திகழவேண்டியதன் அவ சியத்தை வற்புறுத்தியமை குறிப் பிடத்தக்கது. ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸரும் கிரி யைகளில் மக்கள் கொள்ள வேண்டிய ஈடுபாடு பற்றித் தமது உபதேசங்களில் விளக்கியுள்ளார். ஒருவன் தனக்கு நன்கு தெரிந்த கிரியைகளைத் துணைக்கொண்டு படிப்படியாக உயர்ந்த சாதனைக் குச் செல்ல வேண்டுமென்பதை உணரும் பொழுதுதான் சமய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைகின்றது.

இந்து சமயநோக்கில் ஒரு வன் சமய நிலையில் வளர்ச்சி யடையும் போது கிரியைகளின தும் சடங்குகளினதும் / தேவை அவனைப்பொறுத்தவரை குறைந்து போகின்றது. சமய வளர்ச்சியின் இறுதிநிலையாகிய சந்நியாச நிலையில் எத்தகைய கிரியைகளும் தேவைப்படுவ தில்லை. எனவேதான் கிரியைகள் உயர்லட்சியத்தை அடைவதற் குரிய வழிகளாக அமைகின்றன என அறிஞர் எடுத்துக் காட்டு வர். அந்த உயர் நோக்கம் நிறைவேறியபின் அவற்றுக்குரிய தேவையும் குறைந்துபோகின் றது. எனவே சமய வாழ்க்கை யின் ஆரம்ப நிலையில் உள்ளவர் களுக்கே பரந்த அளவிலான கிரியைகள் தேவைப்படுகின்றன. சமய உணர்வு வளர்ச்சி காணும் போது கிரியை புறநிலையை விட அகநிலை சார்ந்ததாக விளங்கு கின்றது. கிரியைகள் நற்செயல் களாகக் கருதப்பட்டு பிறப்பின் உயர்நிலையை அடைவதற்கு ஓர ளவு துணைபுரிவனவேயொழிய ஆன்ம விடுதலைக்கு முழுக்க முழுக்க அவை மட்டுமே துணைபு ரிவன எனக்கொள்ள முடியாது என்பது சமயப்பெரியார்களின் கருத்தாகும். பக்தி அல்லது ஞானத்தினுலன்றி வெறும் கரு மத்தினுல் மோட்சமாகிய விடு தலை கிட்டிவிடாது. ஞானம்கிடைப் பதற்கு அவை நிமித்தமாகவே அமைகின்றன. உமாபதி சிவா சாரியர், ‘கிரியையென மருவு மவை யாவும் ஞானம் கிடைத் தற்கு நிமித்தம்’ என சிவப்பிர காசம் நூலில் குறிப்பிட்டுள் ளமை இங்கு பொருத்தமாக அமைகின்றது. உயர்கதிக்கு ஒரு

வன் இறைவனிடத்தில் தன்னை முற்றிலும் சரணடையச் செய்வதே சிறந்தவழி. 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க' கிரியைகள் ஓரளவு துணைசெய்கின்றன. தனிமனித,, சமூக மற்றும் உலகளாவிய நிலையில் மக்களது நன்மை கருதியே இந்து சமயமரபில் பெரும்பாலன கிரியைகள் இடம்பெறுகின்றன. உலகம் நன்மையடைதல் வேண்டும் என்ற உயர் நோக்கம் கிரியைகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. இவ்வகையில் உயிர்கள்குறைவில்லாது வாழவும் மனிதன் நிறைமனிதனுகத் திகழவும் கிரியைகள் முதற்படியாக அமைவதோடு இந்துக்கள் ஆன்மிக வளர்ச்சிக்குரிய பாதையாகவும் விளங்குகின்றன. கிரியைகளின் இந்த உயர் நோக்கத்தை அறிவதனுலேயே அதில் சிரத்தையுடன் ஈடுபட ஒருவனுக்கு வாய்ப் பேற்படுகின்றது எனக்கூறின் மிகையில்லை.

கலைமகளின் தலைமகன்

## கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

தமிழ் உலகம் கி. வா. ஜ என அழைத்த கலைமகள் இதழின் ஆசிரியரும் வாகீச கலா நிதியுமாகிய வித்துவான் கி. வா. ஜகந்நாதன் *M.A.* அவர்கள் தென்புலம் நோக்கியமை இயற்கையேயாஞலும் சைவத் தமிழ் உலகுக்கு இழப்பேயாகும்.

எழுத்திலும் பேச்சிலும்இவர் இவரேதான். ஒழுக்கத்திலும் விழுப்பத்திலும் இவர் எழுப்பமான ஐயரே ( தலைவரே ) தான். பிறப்பொழுக்கம் குன்ருத பார்ப்பனர்.

இலங்கையின் பல்வேறு ஆலயங்களிலும் பொது மன்றங்களிலும் கல்லூரிகளிலும் கி. வா. ஜ. ஆற்றிய உரைகள் இலக்கியம் கலை சைவசித்தாந்தம் ஆகிய துறைகளுக்கு உந்து சக்தியாயும் மந்திர சக்தியாயும் அமைந்தமை நினைவு கூரப்பட வேண்டியதாகும். ஈழத்து அறிஞர்களையும் அனுபூதிச் செல்வர்களையும் இவர் மதித்தமையும் வணங்கியமையும் இவருடைய சான்ருண்மைக்கு எடுத்துக் காட்டாகியது. இவர் ஆன்மா சிவப்பேறெய்தி மகிழ "ஆலயமணி" ஆலவாய் அண்ணலைப் பிரார்த்திக்கின்றது.

—ஆர்

# சவால்களுடன் வாழும் இந்துசமயம்

கலாநிதி. சி.க. சிற்றம்பலம்

உலக சமயங்களில் இந்து சமயம் ஒன்றுதான் மிக நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத் தினையுடைய தொன்ருகும். இப் புவியின் பல்வேறு பகுதிகளில் வளர்ந்து வாழ்ந்திருந்த சமய நம்பிக்கைகள் பல இன்று அப் பகுதிகளில் வழக்கிலில்லை. மாருக இவற்றின் எச்சங்கள்தான் இவற்றை நினைவுகூர்வனவாகப் பல்வகை அரும்பொருட்களாகப் பற் பல நூதனசாலைகளிற் காட்சிதருகின்றன. இவ்வாறு மறைந்த சமயங்கள் மட்டுமன்றி இன்று வாழும் சமயங்கள்கூட மிக நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத் தினை உடையனவுமல்ல. இவற்றின் ஆரம்பத்தினைக் கூடப் பல நூற்ருண்டுகள் என்ற அட்டவணைக்குள் கோடிட்டுக் கூறிவிடலாம். ஆனுல் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துசமயமோ எனில் இவற்றுக்கப்பால் மிக நீண்டதொரு காலகட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் சின்னமாக விளங்குகிறது எனலாம். இந்துசமய நம்பிக்கைகளின் ஆணிவேரைக் கிறிஸ்து பிறப்பதற்குப் பல சகாப்தங்களுக்கு முன்னர் மத்தியதரைக் கடற்பிரதேசத்தை அண்டிய பகுதிகளிற் காணக் கூடியதாகவிருந்தாலும் கூட அது மரமாகச் செழித்து நல் மலர்கள் பூத்துக்குலுங்கியஇடம்இந்தியஉபகண்டத்திலுள்ள சிந்து, கங்கை, காவேரி ஆற்றுப் படுக்கைகளே. காலகதியில் இந்தியா முழுவதும் பரந்து அன்று நிலவிய பல்வகை நம்பிக்கைகளையும் தன்வயப்படுத்திய சிறப்பும் இந்துசமயத்திற்குண்டு. இவ்வாறு திராவிட ஆரிய மொழி பேசுவோரின் சிறப்பான பங்களிப்பான இச்சமயம் நாளடைவில் ஈழம், தென்கிழக்காசியா ஆகிய பிராந்தியங்களையும் சென்றடைந்ததோடு இன்று உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளது.

இத்தகைய மிக நீண்ட ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தோடு அகன்ற சாஸ்திர மரபு பெற்றுக் காணப்படுவதும் இதன் செழிப்புக்கு மற்றொரு உதாரணமாகும். பௌத்த சமயத்திற்குத் திரிபீடகம், கிறிஸ்தவத்திற்கு விவிலிய வேதம், இஸ்லாத்திற்குக் குருன் என்ற நியதியின்றி இந்துசமயத்திற்கோ வேதங்கள், உபநிஷதங்கள், ஆகமங்கள், தேவார — திவ்விய பிரபந்தங்கள் போன்ற அருஞ் செல்வங்கள் — நிரை நிரையாகவுண்டு.

இத்தகைய சிறப்புடைய சமயம் கால வெள்ளோட்டத்தில் பல்வகைச் சவால்களைச் சமாளித்ததும் வரலாறு. இந்துசமயத்தில் அக்கால நடைமுறைகளில் நிலவிய குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட எழுந்த பௌத்தமும் ஜனமும் நாளடைவில் அதற்குப் பெருஞ் சவாலாகவும் விளங்கின. இவ்வாறேதான் இந்துசமயத்தினை அழிக்கும் முயற்சியில் இஸ்லாமும் பின்னர் கிறிஸ்தவமும் இயங்கின. எனினும் இத்தகைய சவால்களைச் சமாளித்து இன்றும் அழியாது இருப்பது இதற்குரிய தனிச்சிறப்பாகும். சவால்கள் ஏற்பட்டபோது இந்துசமயம் தளர்வுற்றபோது ஞானிகளும், சமய குரவர்களும் தோன்றி இந்து தர்மத்தை விளக்கி. இந்து சமய நடைமுறைகளை மக்களுக்குப் புகட்டி மக்களை வழி நடாத்தியமையே இதனை அழியாது பாது

காத்தது. இதனுல் இந்து தர்மம் சனுதன தர்மமாகியது.

நம் நாட்டைப் பொறுத்த மட்டில் இந்தியாவிற்கு அடுத்தாற்போல் பழமையான இந்து மரபு வளர்ந்த இடமென்பது உண்மையாகும். இந் நாட்டில் பௌத்தம் கால் கொள்ள முன்னர் இங்கு நிலவிய சமயம் இந்து சமய மென்பதும் இக்காலத்தில் சிங்கள – தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினர் இவ் வழிபாட்டு மரபுகளையே கடைப்பிடித் தொழுகினர், என்பதும், கி.மு. 3ஆம் நூற்ருண்டின் நடுப்பகுதியிற் பௌத்தம் இங்கு வர, இந்துக்களின் பெரும்பான்மையினேர் பௌத்தர்களாக மாறியதும் வரலாறு; எனினும் பௌத்தர்களாக, சிங்கள மொழி பேசுவோராக, மாறிய இவர்கள் இன்றும் வழிபடும் இந்து சமயக் கடவுளர் இவர்களின் மூதாதையினரின் சமய நம்பிக்கைகளுக்குச் சாட்சி பகருவனவாக அமைகின்றன என்ருல் மிகையாகாது. எனினும் கடந்த நூற்ருண்டிலும், இந்நூற்ருண்டிலும் இந்து சமயம் மிகப் பெரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளது. ஐரோப்பிய நாகரிகத்தின் சின்னமாகிய கிறிஸ்தவ சமயம் ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில் கடந்த நூற்ருண்டில் வீறுடன் பரவிய போது இந்து நாகரிகமே மிகப் பெரிய சவாலை எதிர் கொள்ள நேர்ந்தது. இத்தகைய சவாலைச் சமாளிக்கத் தோன்றியவர் தான் நாவலர் பெருமானுவர். சமயத்திற்காகவே தமது சுகபோகங்களையும், சிற்றின்பங்களையும் துறந்த இவர் தன்னந்தனியாகக் கிறிஸ்தவ சமயத்திற்கிருந்த நிறுவன அமைப்பைப் போன்ற ஒரு நிறுவன அமைப்பின் ஆதரவோ அன்றி இந்துக்களின் அனுசரணையோ கிட்டாத ஒரு காலகட்டத்தில் இந்துசமய சாஸ்திர நூல்களை அச்சுவாகனமேற்றியும், மக்கள் அவற்றை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு இலகு தமிழில் உரை எழுதியும், சமய அனுஷ்டான முறைகள் பற்றி நூல்களைப் பதிப்பித்தும், கதாபிரசங்கங்களை நடாத்தியும், ஆலயங்களைப் புனிதப்படுத்தியும் இந்துசமயத்திற்குப் புத்துயிர் அளித்தார். இதனுற்ருன் 'நல்லைநாவலர் தோன்றிலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே?' என்று ஒரு புலவர் இவரின் பணிகளைப் போற்றிச் சென்ருர்.

கடந்த நூற்ருண்டில் நாவலர் சுட்டிக்காட்டிய பல்வகைக் குறைகளும் இந்த நூற்ருண்டிலும் களையப்படாதே காணப்படுகின்றன. இந்துக்கள் தங்கள் சமயத்தினைப்பற்றி, அதன் அனுட்டானங்கள் பற்றி, ஆன்ம ஈடேற்றத்தைக் காட்டும் அதன் கிரியைகளின் உட்பொருட்கள் பற்றிச் சரியான விளக்கமற்றிருப்பது பெரிய குறைபாடாகவே காணப்படுகிறது. அறிவின்மையும், விளக்கமின்மையும், தெளிவின்மையும் ஆரோக்கிய பாதைக்குப் பதிலாக அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். இதனுற் பிரசார நோக்குடைய சமயங்களின் சவாலைச் சமாளிப்பது இலகுவன்று. தன் சமயம்பற்றிய தெளிவே தன்னம்பிக்கையை உருவாக்கும். தன்னம்பிக்கையற்ற நிலையில் பிறர் வயப்படுதல் சுடினமன்று பொதுவாகச் சமயத்தில் இரு அம்சங்கள் உண்டு. ஒன்று சடங்குகள், அனுட்டான நடை முறைகள். மற்றது நல்வாழ்க்கை பற்றிய விளக்கமும் செயற்பாடுமாகும். சமூகம் பற்றிய சிந்தனைகள் இந்து சமய சாஸ்திரங்களின் அடிப்

படைத் தத்துவமாக இருந்தும் கூட இந்துசமயமென்பது வெறும் சடங்குகளும் விழாக்களுமே என்ற உணர்வு இந்துக்கள் மத்தியில் மேலோங்கி நிற்பது ஒரு ஆரோக்கியமான நடைமுறையல்ல. உண்மையிலே இந்து சமயம் ஒரு வாழ்க்கை நெறியே. சமூகத்திற்காக வாழ்பவனே, பலனை எதிர்பாராது கடமை செய்பவனே உண்மையான இந்துவாகும். இதனாற் சமூகக் கண்ணோட்டம் பற்றிய சிந்தனை இந்துக்கள் மத்தியில் அருகிக் காணப்படுவதைக் கிறிஸ்தவம் போன்ற பிரசார சமயங்கள் பல்வகைச் சமூகநலத் திட்டங்களால், சமயம் பற்றிய தெளிவான சிந்தனையின்றித் தவிக்கும் இந்துக்களை மதம்மாற்ற வழி வகுக்கிறது. இத்தகைய செயல்கள் தீவிரமாகவும் நடைபெறுகின்றன. துர்அதிஷ்டவசமாக நிறுவன அமைப்பில்லாத இந்து சமயத்தினால் இதனைச் சமாளிப்பது மிகமிகக் கஷ்டமே. இதனால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்துக்கள் சமூகம் பற்றிய சிந்தனைகளில் அதிக அக்கறை காட்ட வேண்டிய அவசரமும் அவசியமுமிருக்கிறது. அத்துடன் இது காலத்தின் தேவையும்கூட.

வெறும் சமயச் சடங்குகளைச் செய்து இந்து அனுட்டானங்களைக் கடைப்பிடித்து வருபவன் மட்டும் இந்துவல்ல. உள்ளதை உள்ளவாறு அஞ்சா நெஞ்சத்துடன் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' 'வானம் துளங்கிலென் மண்கம்பமாகிலென்' என்ற தொனியில் எடுத்துக்கூறி மனச்சாட்சியுடன் நடப்பவனே உண்மையான இந்துவாகும். உண்மையிலே ஒருவனுக்கு மனச்சாட்சிதான் நீதிதேவனுமாகும். கடவுள் அவனது மனச்சாட்சியே. இதனாற்றான் வள்ளுவரும் 'தன்நெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்' என்றார். சுய இலாபத்திற்காக, மனச்சாட்சியை விற்றுப் பிழைக்கும் வழியை இந்துசமயம் காட்டவில்லை. நம்கடன் பணி செய்வதே எனக்கூறும் இச் சமயம் பலன் கருதாது பணிசெய்தல் வேண்டுமெனவும் புகட்டத் தவறவில்லை.

இந்துசமயத்தின் இருதயமாக விளங்குவது ஆலயங்களேயாகும். வீட்டைவிட அலையும் மனதை ஒருவழிப்படுத்தி ஆண்டவன் வழி லயப்படுத்துமிடமே ஆலயமாகும். இத்தகைய ஆலயங்களின் எத்தனை இன்று அலையும் மனதை லயப்படுத்தும் சாதனங்களான நித்திய நைமித்திய கருமங்கள் நடைபெறும் இடங்களாக மிளிர்கின்றன. பெரும்பாலான ஆலயங்கள் இக்கோட்டினுள் அடங்கா. இங்கு நடைபெறும் விழாக்கள் திருவிழாக்கள் அல்ல. உண்மையில் தெருவிழாக்களே. ஆதலால் காலத்தின் தேவைக்கேற்ற முறையில் நேர அட்டவணைக்குள் ஆலயங்களின் நித்திய நைமித்திய கருமங்கள் நடைபெறவேண்டியதும் தற்காலத்திற்குரிய தேவையாகும். ஆலயக் குருக்கள்மார் கல்வி கேள்விகளிற் தலைசிறந்தோராக இருக்கும்போது அவர்களுக்குத் தக்க சன்மானம் அளித்து அவர்களைப் போஷிப்பதும் இந்துவினது கடமையாகிறது. இவ்வாறு வீட்டுக்கிரியைகளும் முகூர்த்தநேரத்திற்கமைய நடைபெறுதல் அவசியமாகின்றது.

நமது நாட்டு வாலாற்றில் கடந்த சில ஆண்டுகள் இந்து சமயம் சொல்லொணாத் துயருற்ற காலப்பகுதியாகின்றது. போதுக்கேயர் போன்ற அந்நியரால் எமது சமயத்திற்கு ஏற்பட்

அவல நிலையை நம் கண்களாற் பார்க்கும் அளவுக்கு நம்மவரால் பல தீங்குகள் இக்காலத்தில் இழைக்கப்பட்டன. ஆலயங்கள் பல அழிந்தன. வழிபாட்டிற்குரிய திருவுருவங்கள் சிதைந்தன. நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டன. இத்தகையதொரு நிலை நமது சமயத்திற்கு ஏன் ஏற்பட்டது என்று ஒவ்வொரு இந்துவும் சிந்திப்பது அவசியமானது. ஆரோக்கியமானது. நாம்இழைத்த தவறுகள் பலவற்றிற்குக் கிடைத்த தண்டனையா இவை எனவும் எண்ணத் தூண்டுகின்றது. இத்தனை இடர்கள் மத்தியிலும் சமயம் அழியவில்லை என்பதைச் சிந்திக்கும்போதுதான் நம் சமயத்தின் தனித்துவம் புரிகிறது.

இத்தகைய தவறுகளுக்குப் பரிகாரமாக சமய அனுட்டானத்தை முறைப்படி அனுட்டிப்பதிலும், கிரிகைகளை உட்பொருளுணர்ந்து நடாத்துவதிலும், வழிபாட்டிடங்களைப் பேணிப்பாதுகாப்பதிலும், சமூக நலனைப்பற்றி விரிந்து சிந்திப்பதிலும் கவனஞ் செலுத்துதல் அவசியமாகிறது. ஆழமுள்ள அகன்றநோக்குடைய நம் சமயத்தினைக் கடைப்பிடிக்கும் எமது சிந்தனைகளும் விரிந்து பரந்து காலத்தோடு ஒத்த புதிய சிந்தனைகளைக் கிரகித்துச் செல்லும் போது எத்தகைய சவால்களை நாம் எதிர்நோக்கினாலும் சமாளிப்போம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை எனலாம்.


# ஆலய மணியின்

வருகை

சாலவும் நன்றே!

சாலவும் நன்றே!!

# SUGANTHA TRADE CENTRE

P2; Colombo Central Supper Market,

***COLOMBO—11.***

முகப்பில் தெரியும் முகம்

# தங்கம்மா என்றொரு தாய்மை

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முற்றத்தில் நிற்கிறேன். மணி மாலை நான்கிருக்கும். மூலஸ்தானத்திலிருந்து அருள் வழங்கும் அம்பிகையின் கோலம் தெரிகிறது. தாயே என்று நினைந்து கைகூப்பினேன். துர்க்காபுரத்து நிலத்தில் கால் வைத்ததும் துர்க்கையம்மன் நினைவுக்கு வருமுன் தங்கம்மா என்ற தாய்மையே நினைவில் தட்டுப்படுகிறது. இது என்ன புதிர்? இதற்குரிய காரணத்திற்கு மூளையைக் குழப்ப வேண்டியதில்லை. உள்மூர்த்தியாய் தான் இருந்துகொண்டு உற்சவமூர்த்தியாய் தங்கம்மாவை உலவி வரவிட்ட துர்க்காதேவியின் அற்புதம் விளங்கினுல் இந்தப் புதிரும் புரிந்துவிடும்.

முற்றத்தில் நின்ற என்பக்கத்தால் ஒருவர் போகிறுர். வயது எழுபது இருக்கும்.

'' அக்கா இருக்கிருவா '' என்று கேட்டேன்.

'' அம்மா இருக்கிறு '' என்று சொன்னுர்.

துர்க்கையம்மனைத்தான் அவர் சொல்கிருரென்று நினைத்து. ''நான் அக்காவைக் காண வந்திருக்கிறேன்'' என்று கூறினேன். ''அம்மாவைப் போய்க் கேளுங்கள்'' என்றுர். நான் குழம்பிக்கொண்டு தயங்க வேருெருவர் குறுக்கிட்டார். '' அக்கா வெளியில் போய்விட்டாவா'' என்றபடி அவரை அணுகினேன். அம்மா வெளியாலை போட்டு இப்பதான் வந்து கோயிலுக்கை போயிருக்கிறுர் என்றுர். துர்க்கையம்மனின் வீதிவலத்தையும் கோயில் நுழைவையும் என்ன அருமையாகச் சொல்லுகிறுர்.

தாயே துர்க்காதேவி! தங்கம்மா என்றொரு தாய்மையை வளர்ப்பவளே நான் ஏழுமணிக்குள் வீட்டுக்குள் போய்விடவேண்டும். முன்பு ஏழுமணிக்கு அரிஹரபுத்திரன் — வீரமணிகண்டன் — மோகினி சுதன்; ஸ்ரீ பூர்ணபுஷ்கலாதேவி சமேத ஐயனுரப்பன் காவலுக்கு வெளிப்படுவதாகக் கேள்வி. இப்பொழுது... அம்பிகே! எனக்கருள் புரிய வேண்டும்.

திருக்கோயிலின் தெற்குப் பக்கமாக நான் தேடிவந்த தெய்வம்

நடந்து கொண்டிருந்தது. "அந்தாப் போரு அம்மா......" என்ருர் முன்னம் — அவவுடைய இருப்பைச் சொன்னவர். ஓடிச்சென்றேன். "வாருங்க புலவர்" என்றபடி அக்கா என்னை வரவேற்ருர்.

"அக்கா உங்களுக்கு ஒரு புதினம் சொல்லவேண்டும். நான் உங்களை அக்கா என்று இங்குள்ளவர்களிடம் விசாரித்தேன். இவர்கள் அம்மா என்று பதில்சொன்னுர்கள். நான் சிறிது தடுமாறி விட்டேன். இப்பொழுது ஏழாம் நூற்ருண்டில் பிறந்த திருஞான சம்பந்தருக்கு என்ன வயதிருக்கும்? அவரை இன்றைக்கு எந்தக்கோலத்தில் நினைக்கிருேம். கிழக்கோலத்திலா....... இல்லையே. இன்றும் சம்பந்தரை மூன்றுவயதுக் குழந்தையாகவேதான் நினைக்கிருேம். உலகியலுக்குத்தான் மூப்பும் தளர்ச்சியும். அருளியலுக்கு அப்படியொன்றும்... இல்லை.

அவர் சிரித்தார், அது ஞானச்சிரிப்பு.

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்று பல்வேறு காரணங்களால் சிவத்தமிழ் முதல்வியாய் திகழ்கின்ருர். சமயத்துறையில் மூன்று நம்பிக்கைகள் முதன்மையானவை என்பேன். ஒன்று கடவுள் நம்பிக்கை, இரண்டாவது தன்நம்பிக்கை மூன்ருவதாய் நின்று முதன்மை இடம்வகிப்பது; பிறர், குறித்த சமயியில் நன் நம்பிக்கை கொள்வது. இதுவே சமயவாழ்வின் முழுமை அல்லது வெற்றியாகும். இந்த முழுமையைப் பெற்ற முதல்வியாகவும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திகழ்தல் மகிழ்தலுக்குரியதாகும்.

சைவம் காவிகட்டிக் காட்டுக்குப் போகும் துறவுவாழ்க்கையை வற்புறுத்தும் சமயம் அன்று. உறவுவாழ்க்கையை வலியுறுத்தும் சமயமாகும். உறவிலும் கட்டிக்கொள்ளுதல் பெற்றுக்கொள்ளுதல் வளர்த்துவிடுதல் என்பதே நமக்குத் தெரிந்தவை. அன்பு செய்தல் அணைத்துக் கொள்ளல் வாழவைத்தல் மகிழவைத்தல் முதலியனவும் உறவு வாழ்க்கையின் இன்னெருபக்கமாகும். இந்தப்பக்கத்தின் நினைவுகளை சொற்களை செயல்களை தாற்பரியங்களை எமக்குக்காட்டிய பெருமை அன்னை தங்கம்மா அவர்களுக்கே உரியதாகிறது. இதனுலேயே இவரை சிவத்தமிழ் முதல்வி என்று அழைக்கலாம்.

1975-ம் ஆண்டு எங்களூரான புங்குடுதீவில் அரியநாயகன்புலம் விநாயகர் ஆலயத்திலே அன்னை தங்கம்மா அவர்களும் நானும் சொற்பெருக்காற்றும் நிகழ்ச்சியின்போது — அப்போது சீதனக் கொடுமை ஒழிப்பில் மும்மரமுயற்சி எடுத்துக் கொண்டிருந்த நான் அன்னை அவர்களை சீதனக்கொடுமை முதலிய தீமைகளை எதிர்த்து இயக்கரீதியில் உழைக்க தலைமை தாங்கி நடத்திச் செல்ல அம்மை

யார் முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த முயற்சி எடுப்பேன். அன்பு வேண்டுகோளை அருட்கட்டளையாக ஏற்றுக் கொள்கிறேன். பெண்களின் சொந்த வாழ்விலும் சமூகவாழ்விலும் குறுக்கிடும் துன்பங்களை அகற்றி இன்பவாழ்வுக்கான இலட்சியங்களைப் புகட்டி குறைவிலா நிறைவைப் பெறுவதற்கு திட்டங்கள் தீட்டிச் செயல்படுவேன். இவற்றிற்கெல்லாம் எனக்கு திருவருள் கிட்டவேண்டுகிறேன்'' என்று அன்னை அவர்கள் சார்புக்குரல் எழுப்பினுர்கள். இச்செய்தி 'ஈழநாடு' இதழில் வெளியானதும் அன்று இலுப்பைக் கடவையிலிருந்து திரு. நாக. பத்மநாதன் ஈழநாடு இதழுக்கு எழுதிய கடிதம் அன்னை அவர்களின் பண்புப் பழுப்பினைக் காட்டுவதாய் அமைந்தது. சீதனக் கொடுமையை ஒழித்துக் கட்டுவோம் என்ற அக்கடிதக் கட்டுரை 5-3-75ல் அவ்விதழில் வெளியாகி நான் எழுதிய சீதனக் கொடுமை ஒழிக என்னும் நூலில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற் கருகில் நிற்கும் போது அன்னை 1975-ம் ஆண்டின் நிகழ்வினை நினைவு கூர்ந்து உரையாடுவது என் வணக்கத்திற்குரியதாகும். அகதிகள்பணி, தேவஸ்தான வெளியீடுகள், புராணபடனம், மஹோற்சவம், மகாகும்பாபிஷேகம், சைவசித்தாந்த மாநாடு, திருப்பணிகள், சமூகப்பணிகள், நிருவாக ஒழுங்குகள் முதலியவற்ருல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிடும் "ஆலயங்கள் சமுதாய மையங்கள்'' என்ற கோட்பாட்டிற்கு அமைய எடுத்துக் காட்டாய் — சேவைக்கு ஒரு தாயாய் விளங்குகிருர்கள்.

இறைவன் தாயினும் நல்ல தலைவன். இறைவி திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாம சுந்தரி. பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அம்மையப்பன்; சைவத்திற்கும் தமிழுக்கும் விளக்கம் தந்தும் ஏங்கிய பிள்ளைகளுக்குப் புறபுறம் திரிந்து தொண்டாற்றியும், மகிழும் தாய்மை; தங்கம்மா என்ற பெயருடன் தமிழர் வாழும் உலகெங்கும் வரவேற்கப்படுகின்றது. இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், இங்கிலாந்து எங்கும் இத்தாய்மை வணங்கப்படுகிறது. சைவசமயத்தின் நன்நம்பிக்கை, சிவத்தமிழ் முதல்வி பல்லாண்டுவாழ திருவருள் பாலிப்பதாக.

— *ஈழத்துச் சிவானந்தன்*

# கடிதங்கள்

ஆலயமணியின் ஆரம்பவிழா அற்புதம். கண்கொள்ளாக்காட்சி என்பார்களே அது இதுதான். உங்கள் தனித்தன்மைகள் பற்றி நான் நண்பர்களுக்குச் சொன்னவற்றை நிரூபித்து விட்டீர்கள். எப்பவோ தொடங்கியிருக்க வேண்டிய காரியத்தை இப்பவாவது தொடங்கினீர்களே! நல்லது.

யாழ்ப்பாணச் சிறுசஞ்சிகைகளின் வரலாற்றில்; ஆலயமணி எழுத்தாளர்களுக்கு சன்மானம் கொடுத்திருப்பது முத்திரை பதியும் முதல் சிறப்பு, பாராட்டுகின்றேன். உங்கள் சொற்பொழிவுத் திறனோடு பத்திரிகையாசிரியத் தன்மைகளும் கலந்து ஆலய மணியை முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துகிறேன்.

— இரா. சிவச்சந்திரன்

விரிவுரையாளர்,
புவியியல் துறை,
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

நல்லை ஆதீனத்தில் நடந்த வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் அறிமுகவிழா நடந்தமையையிட்டுப் பூரிப்படைகிறேன். உங்கள் வரலாறு தெரிந்தவர்கள் இத்தகைய முயற்சிகளில் இறங்குவார்கள் என்பது தெரிந்த விடயமே. தெய்வத்தாய் தங்கம்மா தலைமை தாங்க- சைவமகனுன நீங்கள் தாய்மார்களைக் கொண்டே முதற்பிரதிகளை வாங்கவைத்தமை பொருத்தமாயும் சிறப்பாயும் புதுமையாயும் இருந்தது.

விழாநிறைவில் நன்றி சொல்லிய போது மேடையில் விழுந்து கும்பிட்டு சபையோருக்கு நன்றி சொன்னீர்களே. ''பணியுமாம் என்றும் பெருமை'' என்ற திருக்குறளை ஞாபகப்படுத்தியது.

ஐ. திராவிடதாசன்

411, கே. கே. எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே (று)
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே

— சம்பந்தர்.

# THIVAGAN COMPANY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
FOR LOCAL PRODUCES

208, 4th Cross Street,
COLOMBO - 11

மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டளவுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றேன் உகவாவண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச்
செய்வது ஒன்று அறிய மாட்டேன் திருப்புகலூரனீரே.

— அப்பர்.

புங்குடுதீவு - நயினாதீவு

# பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்

தலைமையகம்

புங்குடுதீவு

## வரவிருக்கிறான்!

# சொற்பொழிவாளன்

சொற்பொழிவுக்கலையின்

*பரிணாம பரிமாணப் பண்புகளைப் பயிரிடவும்*
*சொல்வண்மை சொற்செட்டுக் காட்டிடவும்*
*வளரும் சொற்பொழிவாளர்களை வளர்த்து எடுத்திடவும்*
*அன்பனாய் ஆசிரியனாய் நண்பனாய் சேவகனாய்*

வருகிறான்

சொற்பொழிவாளன்

எதிர்பாருங்கள்

---

## அடுத்த இதழில்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**
**வித்துவான் வசந்தா வைத்தியநாதன்**
**அகளங்கன் ஆகியோரும்**
**பிறரும் எழுதுகிறார்கள்.**

உ

# மணி ஓசை 2

*ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே......*

## இந்து சமயத்தை விட்டு இந்து மதத்திற்கு மாறுதீர்.

சைவ சமயத்திலிருந்து வேறு சமயத்திற்கு சிலர் மாறுகின்ற அவலநிலை ஒன்று நமக்குத் தெரிகின்றது. இது வெறுந் தோற்றமே; தேற்றமில்லை. இதற்குரிய அடிப்படைக் காரணம் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள் தொடர்பானவை என்பதும்; சமய விளக்கமோ வாழ்க்கை விளக்கமோ இல்லாத நிலையும், சைவ — இந்து சமயஞ் சார்ந்தவர்கள் சிலரின் சொல்லொன்றும் செயலொன்றுமானதும்; வேடமொன்றும் பாடமொன்றுமான நடைமுறைகளுமே என்பதும் காரணங்களாகும். இது குறித்த ஆய்வுகள் தக்காரால் மேற்கொள்ளப்பட்டு திருத்தங்கள் செய்யப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு சிவபெருமான் நக்கு நிற்கலாம். சிவனைச் சார்ந்த சமயிகள் நகர்ந்து நிற்கலாமா? சிவசேனையாகி சிவப்பணி செய்ய வேண்டாமா? மனம் வெளுத்து; கொண்டும் கொடுத்தும் குடிகுடியீசர்க்கு ஆட்செய்யும் காலம் வரப்போவதில் ஐயமில்லை.

இப்பொழுது நமது சைவ — இந்து சமயத்தை மதம் மதம் என்று சொல்வதிலிருந்து நாம் மீளவேண்டும். மதம் என்றால் காமமும் வெகுளியும் கலந்த கலவையாகும். உள்ளக் கொதிப்பு; குமுறல் ஆணவ முனைப்பு அன்பின்மை என்றெல்

லாம் பொருள்படும். பொங்கும் மதம் என்பார் அப்பரடிகள். யானைக்கு மதம் பிடித்துவிட்டது என்று சொல்லுகின்றோமே அது அதன் அடங்காத் தன்மையைக் குறிக்கின்றது.

ஒரு இந்துவுக்கு மதம் பிடிக்கலாமா? ஆதலால் சமயம் என்ற சொல்லைப் பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். சமயம் என்ற பதத்திற்கு அருமையான ஆழமான கருத்து உண்டு. சமயம் என்பது உள்ளத்தைச் சமைக்கும் சாதனம் ஆகும். அரிசி சமைந்து சோறுவதுபோலே — காய் சமைந்து கறி ஆவதுபோலே உள்ளத்தின் உள்ளே உண்டாகும் தீய உணர்வுகளை, உள்ளோட்டங்களை சமைத்து மனிதனை தூயவன் ஆக்கி வாழ்க்கைக்குப் பயன் உள்ளவனாக வாழ்க்கையை பயன் ஆக்குபவனாக பக்குவப்படுத்தும் சாதனமே சமயம் என்பது. இச்சமயத்தை விட்டு மதம் மதம் என்று நாம் மாறுட்டமாக மயங்கி மாழலாமா? மதம் பிடித்தவர்களாய் ஆண்டவன் சந்நிதானத்திலும் பிற இடங்களிலும் மத யானை போல் பிளிறி பிசங்கி மதநீர் சிந்தலாமா? ஒரு சொற் பொருளின் பாதிப்பு எத்தகையது என்பதை மனோ இயல் வல்லுநர்கள் கண்டுபிடித்துக் காட்டியுள்ளனர். இதனை நாம் புறக்கணித்தல் கூடாது. சமயத்திலிருந்து மதத்திற்கு மாறுவதும் ஒரு சமயமாற்றமே.

இதனை நாம் கருத்திலிருத்தி ஒருவரோடொருவர் உரையாடும் போதும் மேடைகளில் பேசும் பொழுதும் ஏடுகளில் எழுதும் போதும் சமயம் என்ற சொல்லையே கையாள வேண்டும். இச்சொல்லும் நம்மை சமயியாக்கும். மதம் மதம் என்றால் மதயியாக்கி வதம் செய்யும். இந்த ஆதாரம் புரிந்து விட்டால் ஆண்டவனின் அருளைப்பெற அடிப்படை சமைத்தவர்களாவோம்,

— ஆசிரியர்

10 – 11 – 1988

உங்களிடம் உறங்கிக் கிடக்கும் பணத்திற்கு,

உத்தரவாதத்துடன் உயர் வட்டியும் பெற விரும்புகிறீர்களா?

இன்றே நாடுங்கள்

# "ஷப்ரு"

## நிலையான வைப்புத்திட்டம் Term Deposits

குறைந்த வைப்புத் தொகை............... 1000/-

மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை... 5000/-

| காலம் (மாதம்) | மாதாந்த வட்டிவீதம் | முதிர்ச்சியில் வட்டிவீதம் |
|---|---|---|
| 3 | | 15% |
| 6 | 15% | 17% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

உங்கள் நிதியைப் பெருக்க மேலும் பல 'புதிய வழிகள்'

"ஷப்ரு"வின் உதவியை நாடுங்கள்.

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு 4.

207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 589310, 500576.

வீட்டுக்காரிகளுடன் போட்டிபோடும்

**ஹோட்டல் ஐலண்ட்**

கொழும்பு நகரில் ஒழுங்கான சைவ உணவு வகைகளுக்கும்
தரமான தங்குமிட வசதிகளுக்கும் நாடுங்கள்

# ஹோட்டல் ஐலண்ட்

## HOTEL ISLAND

அறுசுவைப் பெறுமானம் ஆனந்தத் திருப்தி
பெருநகரில் பெயரெடுத்த உணவகம்

ஹோட்டல் ஐலண்ட்

சகலவசதிகளையும் கொண்ட பாதுகாப்பான தங்குமிடவசதிக்கு

**ஐலண்ட் லொட்ஜ்**

ISLAND LODGE

- ★ வாகனங்கள் நிற்பதற்கும் இடவசதி உண்டு
- ★ கொழும்பு—யாழ் சொகுசு பஸ், மினிபஸ் ஆசனங்கள் பதிவு செய்து இவ்விடத்தில் இருந்தே பிரயாணம் செய்ய ஒழுங்குகள் செய்யப்படும்.
- ★ சர்வதேச தொலைபேசி வசதித் தொடர்புகளும் இங்கே கிடைக்கும்.

**Hotel Island <-> Island Lodge**

ALL VARIETIES OF HIGHCLASS VEGETARIAN DISHES — ROOMS WITH ALL COMFORTS

**AVAILABLE UNDER ONE ROOF**

141, Sri Kathiresan street — COLOMBO - 13

T.P. 547410, 548358



இச்சஞ்சிகை 388/7 பருத்தித்துறை வீதி, நல்லூர் முகவரியில் வாழும் ஆசிரியரும் வெளியிடுபவருமான புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களால் யாழ். ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டது.